சிறுவர்கள் முதல்
பெரியோர் வரை
நாட வேண்டிய
★ ஒரே ஸ்தாபனம் ★
ராக மாலிகா
ஆடை அகம்
4, நவீன சந்தை,
(உட்புறம்)
யாழ்ப்பாணம்.

பக்கங்கள் ஆறு
Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 5-00

இன்றைய நாகரிகத்தின்
நவீன முன்னோடிகள்
ராக மாலிகா
ஆடை அகம்
4, நவீன சந்தை,
(உட்புறம்)
யாழ்ப்பாணம்.

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 பங்குனி 24 புதன்கிழமை (06 – 04 – 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 130

செய்திச் சாரம்

கிளாலி-பூநகரி படகுச் சேவை

யாழ்ப்பாணம், ஏப். 6

கிளாலி — பூநகரி படகுச் சேவை இன்று புதன்கிழமை வழமையான நேரத்தில் நடைபெறும் என்று விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர். (உ-8)

முல்லைத்தீவில் 'ஜயபூமி'

கொழும்பு, ஏப். 6

'ஜயபூமி' என்னும் இராணுவ நடவடிக்கை முல்லைத்தீவில் படையினரால் மேற்கொள்ளப்படுகிறது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை வெலிஓயாவில் உள்ள விடுதலைப் புலிகள் தளம் மீது மேற்கொண்ட தாக்குதலின் போது 3 படையினர் காயமடைந்தனர் என்றும் அறிவிக்கப்பட்டது. (உ-3)

நாட்டரிசி விலை

யாழ்ப்பாணம், ஏப். 6

எதிர்வரும் ஒன்பதாம் திகதி தொடக்கம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் ஒரு கிலோ நாட்டரிசியின் ஆகக் கூடிய சில்லறை விலை 29 ரூபாவாக இருக்கும் என்று அறிவிக்கப்படுகிறது.

வெளிச்சந்தையில் ஒரு கிலோ நாட்டரிசியின் ஆகக் கூடிய சில்லறை விலை 29 ரூபா 50 சதமாக இருக்க வேண்டும் என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித்துறை அறிவுறுத்தி உள்ளது. (அ)

ராணுவத்திற்கு ஆட்சேர்ப்பு

கொழும்பு, ஏப். 6

ஸ்ரீலங்கா இராணுவத்திற்கு மேலும் சிப்பாய்களை சேர்த்துக் கொள்வதற்கு, இன்று தொடக்கம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை நேர்முகப் பரீட்சைகள் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

தென்னிலங்கையில் 14 நிலையங்களில் நேர்முகப் பரீட்சைகள் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டது. (ஓ)

'ஹெந்தல' வந்தது 'வாதுவ' சென்றது

யாழ்ப்பாணம், ஏப். 6

நேற்று பருத்தித்துறைக்கு வந்த சர்ந்த 'ஹெந்தல' கப்பலில் ஆயிரத்து 925 மெற்றிக் தொன் மா எடுத்து வரப்பட்டது.

அதேவேளை—

பொருள்களை இறக்கி முடித்த 'வாதுவ' கப்பல் நேற்று கொழும்புக்கு புறப்பட்டது. [உ-3-173-87-17]

ஓய்வூதிய வவுச்சர்கள் வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம், ஏப். 6

யாழ் மாவட்ட ஓய்வூதியர்களின் ஏப்ரல் மாத ஓய்வூதிய வவுச்சர்கள் நேற்று வந்து சேர்ந்தன.

அத்துடன் ஆயிரத்துக்கு மேற்பட்ட அடையாள அட்டைகளும் எடுத்து வரப்பட்டுள்ளன. [உ-3-173)

சு.க. பிரமுகர் சுட்டுக் கொலை

கொழும்பு, ஏப். 6

பேருவளை பிரதேச சபையின் ஸ்ரீ.ல.சு.க. உறுப்பினர் உபாலி ஹரிச்சந்திர டி சில்வா என்பவர் நேற்று முன்தினம் காலையில் கொழும்பு—காலி வீதியில் பேருவளைக்கும் களுவாமோதரைக்கும் இடையில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

மோட்டார்சைக்கிளில் வந்த இனந்தெரியாதோர் இவரைச் சுட்டுக் கொன்றனர். (உ-6)

அனுராதபுரத்தில் கொள்ளை

கொழும்பு, ஏப். 6

அனுராதபுரம் பகுதியில் நேற்று இடம்பெற்ற கொள்ளைச் சம்பவத்தை அடுத்து சந்தேக நபர்கள் இருவர் உடனடியாக கைது செய்யப்பட்டனர்.

அனுராதபுரம் கூட்டுறவுச் சங்க அதிகாரி ஒரு லட்சத்து 4 ஆயிரம் ரூபாவை வங்கியில் வைப்பிலிடச் சென்றபோது, ஆயுதபாணிகள் இருவர் வழிமறித்து பணத்தை கொள்ளையிட்டனர்.

உடனடி தகவலை அடுத்து நொச்சியாகம பொலிஸார் சந்தேக நபர்களை கைது செய்து, பணத்தையும் மீட்டனர். (ஓ)

கிரனேட் வெடித்து 3 சிறுமிகள் பலி!

கொழும்பு, ஏப். 6

கிரனேட் ஒன்று வெடித்ததில் மூன்று பெண் குழந்தைகள் கொல்லப்பட்ட சம்பவம் தென்மாகாணம் — ரக்கம பகுதியில் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

பத்மசிறி என்பவர் வைத்திருந்த கிரனேட் வெடித்த போதே இச் சிறுமிகள் கொல்லப்பட்டனர் என்று தெரிய வந்துள்ளது.

அந்த நபரிடம் கிரனேட் எப்படி வந்தது என்பது பற்றி பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

தமிழ் அதிபர் சுட்டுக் கொலை

கொழும்பு ஏப். 6

மட்டக்களப்பு மாவட்டம்—தம்பிலுவிலில் அரச படையினரால் பாடசாலை அதிபரான கந்தப்பிள்ளை தம்பிராசா என்பவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

காவல் நிலை ஒன்றில் பதுங்கியிருந்த படையினர் சுட்டபோது இவரது முகத்தில் துப்பாக்கிக்குண்டு பாய்ந்தது என்று தெரிவிக்கப்படுகிறது.

சம்பவதினம் இரவு 10.30 மணியளவில் இவர் பாடசாலைக் கட்டடம் ஒன்றில் நடமாடிக் கொண்டிருந்தபோது சுடப்பட்டார். 46 வயதான இவர் நான்கு பிள்ளைகளுக்கு தந்தையாவார். (உ-எ)

கூரேயின் இடத்துக்கு புதியவர்?

கொழும்பு, ஏப். 6

ஐ. தே. கவுக்குள் ஏற்பட்டிருக்கும் முரண்பாட்டை அடுத்து கட்சியின் பொதுச் செயலாளர் பதவியில் இருந்து அமைச்சர் சிறிசேன கூரே விலகினால், அந்த இடத்துக்கு அமைச்சர் பி. தயாரத்னா, வடமேல் மாகாண ஆளுநர் டாக்டர் கருணாரத்னா கொடித்துவக்கு, உதவிச் செயலாளர் கசில முனசிங்கா ஆகியோரில் ஒருவர் நியமிக்கப்படலாம் என்று தெரியவருகிறது. [உ-எ]

தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் முடிவுகள் தபாலில்

யாழ்ப்பாணம், ஏப். 6

ஜி. சீ. ஈ. சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றிய தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் முடிவுகள் நேற்று மாலை தபாலில் சேர்க்கப்பட்டன. முடிவுகள் இன்று அவர்களுக்குக் கிடைக்கும். (அ-3 5)

உயர்தர மொத்தப் புள்ளிகள்

யாழ்ப்பாணம், ஏப். 6

கடந்த ஆகஸ்டில் நடைபெற்ற ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சையில் தோற்றிய மாணவர்கள் பெற்ற பெறுபேறுகளின் அடிப்படையில் அவர்கள் பெற்ற மொத்தப் புள்ளிகளின் விவரங்கள் நேற்று இங்கு வெளியாகின.

ஜி.சீ.ஈ சாதாரணதர பரீட்சைப் பெறுபேறுகளுடன் அவையும் கொழும்பில் இருந்து எடுத்துவரப்பட்டன. [-5-9]

ஆயுதக் கொள்வனவுக்காக ஜனாதிபதி சீனா செல்கிறார்!

அடுத்த மாதம் பயணம்

ராணுவ உறவு பற்றியும் பேசுவார்

கொழும்பு, ஏப்ரல். 6

ஸ்ரீலங்காவின் ஆயுதத் தேவை மற்றும் கொள்வனவு குறித்து சீன அரசுத் தலைவர்களுடன் நேரில் பேச்சு நடத்துவதற்காக ஸ்ரீலங்கா ஜனாதிபதி டி.பி. விஜேதுங்க மே மாதம் முதல் வாரத்தில் சீனா செல்கிறார்.

இரு நாடுகளுக்கும் இடையேயான இராணுவ, பொருளாதார மற்றும் அரசியல் ரீதியிலான உறவுகள் குறித்து சீனத் தலைவர்களுடன் அவர் விரிவான பேச்சுக்களை நடத்துவார் என அறிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி விஜேதுங்கா எதிர்வரும் மே மாதம் 1ஆம் திகதி முதல் 9ஆம் திகதி வரை சீனாவில் உத்தியோகபூர்வ பயணம் ஒன்றை மேற்கொள்ளவிருக்கின்றார் என்று அறிவிக்கப்படுகிறது.

பதவிக்கு வந்த பின்னர் திரு.விஜேதுங்கா மேற்கொள்ளவிருக்கும் முதலாவது வெளிநாட்டுப் பயணம் இதுவாகும்.

இலங்கைக்கு விஜயம் செய்த சீனத் துணைப் பிரதமர் லியான் கிச்சென் அப்போது விடுத்த அழைப்பை ஏற்று திரு. விஜேதுங்கா சீனா செல்கிறார்.

ஜனாதிபதி விஜேதுங்காவுடன் உயர்நிலைக் குழு ஒன்றும் சீனா செல்லவுள்ளது.

ஐ.தே.க. - இ.தொ.கா. உறவு அனுராவின் சமரசம் வெற்றி?

கொழும்பு, ஏப். 6

ஐ. தே. கவுக்கும் இ.தொ.காவுக்கும் இடையிலான பூசலைத் தீர்க்க அமைச்சர் அனுரா பண்டாரநாயக்கா ஆரம்பித்த உயர்நிலை முன் முயற்சி பயனளித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வியாழக்கிழமை ஐ. தே. கவுக்காக அனுரா அமைச்சர் தொண்டமானைச் சந்தித்துப் பேசினார் என்றும்—

அந்த சந்திப்பின் போது எதிர்காலத் தேர்தல்களில் ஐ தே.கவை ஆதரிக்கப்போவதாக அமைச்சர் தொண்டமான் அனுராவிடம் உறுதியளித்தார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அதன் பின்னர் அன்றைய தினமே அனுரா பண்டாரநாயக்கா ஜனாதிபதியைச் சந்தித்து, பேச்சு விவரங்களை தெரிவித்தார்.

ஐ தே க. — இ. தொ. கா. இடையேயான முரண்பாடான விஷயங்களை எ

(6 ஆம் பக்கம் பார்க்க)

ஐ.தே.கவுக்கு விடுக்கப்பட்ட ஓர் அபாய அறிவிப்பு!

தேர்தல் முடிவு குறித்து ரணில்

கொழும்பு, ஏப். 6

தென் மாகாண சபைத்தேர்தல் முடிவு ஐக்கிய தேசியக் கட்சிக்கு விடுக்கப்பட்ட அபாய அறிவிப்பு ''றெட் நோட்டீஸ்'' ஆகும்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு கருத்துக்கூறியுள்ளார்.

வீதி அபிவிருத்தி நிர்மாணிப்பு கம்பனியில் உள்ள ஜாதிக சேவா சங்க அங்கத்தவர்களின் வருடாந்த மாநாட்டுக்குத் தலைமை வகித்து உரையாற்றுகையிலேயே பிரதமர் இவ்வாறு கூறியுள்ளார்.

இந்த அபாய அறிவிப்பை ஒரு முன்னெச்சரிக்கையாக வைத்து கட்சியை சீரமைக்க இருக்கிறோம்—

கட்சியின் சீரமைப்புக்குழு இதுபற்றி இப்பொழுது ஆராய்ந்து வருகிறது ஜனாதிபதியும் தனது ஆலோசனையை அந்தக் குழுவுக்கு வழங்குவார் என்றும் பிரதமர் மேலும் அங்கு தெரிவித்தார்.

எமது கட்சி ஒரு ராணுவப் படையைப் போன்றது தோல்வியைக்கண்டு நின்று விடாமல் தொடர்ந்து முன்செல்வோம் என்றும் பிரதமர் தமது உரையில் குறிப்பிட்டார். [ஓ-5]

முச்சந்தி முரளி



கொண்டு வந்து தர்றது பரீட்சை ஆணையாளரின்ரை வேலைதானே எண்டு நினைச்சிருப்பினம்......!

தொண்டர் அமைப்புகளின் பிரதிநிதிகள் யாழ். வந்தனர்

யாழ்ப்பாணம், ஏப். 6

பிரிட்டன், நெதர்லாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த உதவி வழங்கும் தொண்டர் அமைப்புப் பிரதிநிதிகள் இருவர் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

பிரிட்டன் கபோட் அமைப்புப் பிரதிநிதி திரு. ஸ்ரீவ் அல்சன், நெதர்லாந்து ஹரித்தாஸ் அமைப்பு பிரதிநிதி திரு. வோர்ட் வான் ரூட்டினிக் ஆகியோரே நேற்று வந்தவர்களாவர்.

இவர்களுடன் ஜோ. வில்லியம் என்பவரும் வந்துள்ளார். இவர் ''செடக்'' அமைப்பின் கொழும்பு அலுவலக அதிகாரியாவர்.

எதிர்வரும் 12 ஆம் திகதி வரை இவர்கள் யாழ்ப்பாணத்தில் தங்கியிருப்பர்.

அதேவேளை — உலக தரிசன அமைப்பின் இலங்கை அலுவலக பொது முகாமையாளர் அன்ரூ சுந்தர்சிங், மற்றும் அந்த அலுவலகத்தின் கணக்காளரும் நேற்று யாழ்ப்பாணம் வந்துள்ளனர். (உ-3-173-87)

காலையில் வந்த பரீட்சை முடிவுகள் மாலையில் வெளியிடப்பட்டது ஏன்?

பரீட்சார்த்திகள், பெற்றோர்கள் கவலை

யாழ்ப்பாணம், ஏப். 6

யாழ். மாவட்ட பரீட்சார்த்திகளின் ஜி. சீ. ஈ சாதாரணதர பரீட்சை முடிவுகள் நேற்று மாலையிலேயே வெளியிடப்பட்டன.

அதனால் நகரப் பகுதி தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் உள்ள பாடசாலை பரீட்சார்த்திகளின் முடிவுகள் இன்று காலையி[illegible]வுள்ளன!

இத்தனைக்கும் மாணவர்கள் கடந்த எட்டு நாட்களாக ஆவலோடு எதிர்பார்த்திருந்த பரீட்சை முடிவுகள் கொண்ட மூன்று பொதிகள் நேற்றுக் காலை எட்டு முப்பதுமணிக்கே பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்துவிட்டன.

அவற்றை யாழ்ப்பாணம் [illegible] கல்வித் திணைக்கள அதிகாரிகள் எவரும் பருத்தித்துறை செல்லவில்லை!

அதனால் பரீட்சை முடிவுகள் அடங்கிய பொதிகள் 22 மைல் தூரத்தைக் கடந்து யாழ். நகரம் வருவதற்கு எட்டு மணித்தியாலங்கள் எடுத்தன. நேற்றுப் பிற்பகல் [illegible]0 மணிக்கே கல்வித் திணைக்களத்தை வந்தடைந்தன!

கல்வித் திணைக்களத்தில் நூற்றுக்கணக்கான அதிகாரிகள் பணியாற்றுகிறார்கள். அத்தியாவசிய தேவைக்கென ஓர் ஓட்டோ வண்டியும் உண்டு!

ஜி சீ. ஈ சாதாரண தர பரீட்சை முடிவுகள் கொழும்பில் கடந்த மாதம் 29 ஆம் திகதியே வெளியாகிவிட்டன.

கொழும்பு பரீட்சைப் பகுதியிலிருந்து எவரும் முடிவுகளை

(5 ஆம் பக்கம் பார்க்க)

கொழும்பு செல்லும் நோயாளர்

யாழ்ப்பாணம், ஏப். 6

நாளை வியாழக்கிழமை கொழும்பு செல்லவிருக்கும் நோயாளர்களை இரண்டு நாட்களுக்குத் தேவையான உணவு, தண்ணீருடன் காலை 8 மணியளவில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு சமூகம் தருமாறு பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

டி.ஜே.வி.பி. தலைவர் சுட்டுத் தற்கொலை

கொழும்பு, ஏப். 6

தேசப்பிரேமி ஜனதா விமுக்தி (டி. ஜே. வி. பி.) தலைவர் நிஹால் பெரேரா தன்னைத் தானே சுட்டுத் தற்கொலை செய்து கொண்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அதற்கு முதல்நாள்—புதன்கிழமை—அவர் ஒரு சிரேஷ்ட பத்திரிகையாளருக்கு தொலைபேசி மூலம் புதிய தென்மாகாணசபையில் இரண்டு போனஸ் ஆசனங்களையும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி தனதாக்கிக் கொண்டது பற்றி முறையிட்டார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் வெற்றிக்குப் பாடுபட்ட தம்மையும் ஏனையோரையும் ஸ்ரீ.ல சு.க. தலைமையிலான அந்த முன்னணி கறிவேப்பிலை போல் பாவித்து விட்டு தூக்கி எறிந்து விட்டது என்றும் நிஹால் பெரேரா அப் பத்திரிகையாளரிடம் குறைப்பட்டுக் கொண்டார். [உ-எ]

நன்றி மறந்தவர்களுக்கு தேர்தல் சரியான பாடம்

மகிழ்ச்சி தெரிவிக்கிறார் ஹேமா

கொழும்பு, ஏப். 6

தென் மாகாணசபைத் தேர்தல்முடிவு நன்றி மறந்த ஐக்கிய தேசியக் கட்சியினருக்கு சரியான பாடம் ஒன்றை படிப்பித்துள்ளது.

திருமதி ஹேமா பிரேமதாஸா இவ்வாறு மகிழ்ச்சி தெரிவித்தார்.

அமரர் பிரேமதாஸாவின் நாமத்தையே தேர்தல் பிரசாரத்தில் திட்டமிட்டு பயன்படுத்தாதவர்களுக்கு மக்கள் நல்ல பாடம் கற்றுக் கொடுத்துள்ளனர் என்றும் அவர் கூறினார். (ஓ-எ)

ஜி.சீ.ஈ. (சா.த)பரீட்சை

பலருக்கு 8ஆவது பாட பெறுபேறு வரவில்லை

யாழ்ப்பாணம், ஏப். 6

ஜி சீ. ஈ. (சாதாரண) தரப் பரீட்சை முடிவுகள் நேற்று வெளியானபோதும், பல பாடசாலைகளில் அழகியல், கலை பாடத்துக்கான முடிவுகள் கிடைக்கவில்லை. இதனால் அனேகமான பாடசாலைகளில் 7 ''டி'' பெறுபேறே மிக உச்ச பெறுபேறாக அமைந்தது.

சில பிரபல பாடசாலைகளின் பெறுபேறு வருமாறு:-

★ யாழ், இந்து	—	7 டி (15 பேர்)
★ சென் ஜோன்ஸ்	—	7 டி (14 பேர்)
★ சுண்டுக்குளி மகளிர்	—	7 டி (11 பேர்)
★ யாழ். இந்து மகளிர்	—	7 டி (3 பேர்)
★ உடுவில் மகளிர்	—	7 டி (3 பேர்)
★ வேம்படி மகளிர்	—	7 டி (2 பேர்)
★ சென். பற்றிக்ஸ்	—	7 டி (ஒருவர்)
★ கொக்குவில் இந்து		6 டி (3 பேர்)
★ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி	—	6 டி (ஒருவர்)
★ திருக்குடும்ப கன்னியர் மடம் (ஆங்கிலம்)	—	5 டி (8 பேர்)
★ கனகரத்தினம் ம. ம. வி.	—	4 டி (3 பேர்)
★ யாழ்ற்ரன் கல்லூரி	—	5 டி (ஒருவர்)
★ ஊர்காவற்துறை புனித அந்தோனியார்	—	4 டி (இருவர்)
★ பளை ம. வி.	—	5 டி (ஒருவர்)

[உ-3-9]

மீண்டும் பதவியில் அமர்த்துமாறு

லெப். கேணல் கொத்தலாவல உயர் நீதிமன்றில் வழக்கு

கொழும்பு. ஏப். 6

இராணுவத்தில் இருந்து விலக்கப்பட்ட லெப்டினன்ட் கேணல் ஜயந்த கொத்தலாவலை அடிப்படை உரிமை மீறல் வழக்கு ஒன்றை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

இராணுவ நீதிமன்ற விசாரணை நடத்தாது தம்மை இராணுவத்தில் இருந்து விலக்கியது அரசமைப்பின் உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை மீறிய செயலாகும் என்று அவர் தமது மனுவில் தெரிவித்துள்ளார்.

இராணுவத் தளபதி, சட்டமா அதிபர் ஆகியோரை அவர் தமது மனுவில் பிரதிவாதிகளாகக் காட்டியுள்ளார்.

இம்மனு கடந்த வியாழக்கிழமை உயர் நீதிமன்றத்தில் நீதியரசர்கள் பெர்னாண்டோ, தீரரத்தினா, பெரேரா ஆகியோர் முன்னிலையில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இம்மனு குறித்து விசாரணை நடத்த அனுமதிப்பதா என்று நிர்ணயிப்பதற்கு உதவும் படி சட்டமா அதிபருக்கு அறிவிக்குமாறு உயர்நீதிமன்றம் தமது பதிவாளரைப் பணித்துள்ளது.

லெப்டினன்ட் கேணல் கொத்தலாவலை தமது மனு

(6 ஆம் பக்கம் பார்க்க)

கடைசி நேரத்தில் திடீரென ரத்தாகிவிட்ட சபாநாயகர் முஹம்மதுவின் யாழ். விஜயம்

சபாநாயகர் அல்ஹாஜ் எம். எச். முஹம்மதுவின் உத்தேச யாழ். பயணம் பின்போடப்பட்டதன் பின்னணியில் இடம்பெற்ற விவரங்கள் வருமாறு:

கடந்த புதன்கிழமை காலை சபாநாயகர் முஹம்மது சவூதி அரேபியாவின் தலைநகர் றியாத்தில் இருந்து எயர்லங்கா விமானமூலம் நேராகக் கொழும்பு வந்தடைந்தார்.

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாக அவருக்கு அனுப்பிய தகவல் அங்கு காத்திருந்தது.

சபாநாயகரையும் அவரது குழுவினரையும் ஏற்றிவரும் ஹெலி கொப்டர் யாழ் பல்கலைக்கழகத்தில் உள்ள காணியில் தரையிறங்குவது பற்றிய விவரங்கள் அத்தகவலில் குறிப்பிடப்பட்டிருந்தன.

பயணத்தின் கடைசி நிமிடம் வரையிலான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பது அதில் தெரிந்தது.

சபாநாயகரின் சமாதானப் பயணம் பற்றிய செய்திகளுக்கு யாழ்ப்பாணத்தில் உள்ள தினசரிகள் முன்பக்க முக்கியத்துவம் கொடுத்தன.

ஜனாதிபதியைச் சந்தித்தார் முஹம்மது

கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அனுப்பிய தகவலை வாசித்த சபாநாயகர் ஜனாதிபதி விஜேதுங்காவைச் சந்திக்க ஜனாதிபதி செயலகத்துக்கு விரைந்தார்.

தமது பயணம் பற்றிய இறுதி ஒழுங்குகளை பூர்த்தி செய்யவும்—

கருத்துகளைப் பரிமாறிக் கொள்ளவுமே சபாநாயகர் ஜனாதிபதியைச் சந்திக்கச் சென்றார்.

ஜனாதிபதியுடன் ஒருமணி நேரம் சந்திப்பு

இச்சந்திப்பு ஒரு மணித்தியாலம் வரை நீடித்தது.

இந்தக் கட்டத்தில் சபாநாயகர் யாழ் செல்வதை ஜனாதிபதி விரும்பவில்லை.

'அரசமைப்பு ரீதியாக சபாநாயகர் என்ற முறையில் நாட்டுத் தலைமைப்பீடத்தில் மூன்று உயர்நிலை அந்தஸ்து உங்களுக்கு உண்டு. ஆகவே பயணத்தைத் தொடருவது புத்திசாலித்தனமானதல்ல'— என்று ஜனாதிபதி தெரிவித்தார்

தேசிய பாதுகாப்புச் சபையும் இந்த அபிப்பிராயத்தையே கொண்டிருப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

தமது யாழ். பயணத்துக்கு சபாநாயகர் பதவி முட்டுக்கட்டையாக இருக்குமானால், சபாநாயகர் பதவியை ராஜினாமாச்செய்துவிட்டு சாதாரண பிரஜையாக யாழ் செல்வதாக அல்ஹாஜ் முஹம்மது ஜனாதிபதிக்குத் தெரிவித்தார்.

ராஜினாமாவை ஏற்க மறுப்பு

ராஜினாமாவை ஏற்க மறுத்த ஜனாதிபதி— ''நீங்கள் எங்களுக்கு தேவை'' என்றார்.

''உங்கள் சமாதான பயணத்தை ஒத்திவைக்கும்படி மட்டும் தான் கேட்கின்றேன்'' — என்று ஜனாதிபதி சபாநாயகரிடம் தெரிவித்தார்.

தென்மாகாணசபைத் தேர்தல் தோல்வியின் பின்னர் சபாநாயகர் யாழ். செல்வது விடுதலைப்புலிகளுக்கு 'பிழையான சைகை'யைக்கொடுத்துவிடும் என்ற காரணத்தினால் தான் ஜனாதிபதி ஆதரவு கொடுக்கவில்லை என்று அரசு வட்டாரங்கள் வாதிட்டன.

ஜனாதிபதி மட்டுமல்ல, பாதுகாப்புத்துறை அதிகாரிகள் கூட இதே அபிப்பிராயத்தைக் கொண்டிருந்தனர்.

பயங்கரவாத யுத்தம் மட்டும் தான் நடைபெறுகிறது என்று தெளிவாக படையினரிடம் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், சபாநாயகரின் யாழ் பயணம் சிப்பாய்களுக்கும் 'பிழையான சைகை'யையே காட்டி விடும் என்றும் படை அதிகாரிகள் கருத்து வெளியிட்டனர்.

சபாநாயகர் கடிதம்

இதற்கிடையில்—

சமாதான பயணம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது குறித்து நாம் அதைரியம் அடையக் கூடாது என்று விடுதலைப் புலிகள் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்துக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் சபாநாயகர் முஹம்மது கூறியுள்ளார்.

'சண்டே டைம்ஸ்' இத்தகவலை வெளியிட்டுள்ளது.

''என் பயணம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதற்கான காரணங்கள் எனது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டவையாகும்'' —என்றும் அவர் அக்கடிதத்தில் தெரிவித்திருக்கிறார்.

புலிகளுக்கு பாராட்டு

சமாதான நடைமுறையை உருவாக்குவதற்கு விடுதலைப் புலிகள் எடுத்து வரும் முயற்சிகளையும் சபாநாயகர் பாராட்டியுள்ளார்.

''நாம் அதைரியப்படக் கூடாது'' என்றும் அவர் தமது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

செயற்பாட்டுக் காரணிகளுக்காக யாழ். பயணம் ஒத்திவைக்கப்பட்டதாக உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டாலும் இவ்வாண்டு இறுதியில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பதாக விடுதலைப்புலிகளுடன் எந்தவித சமாதானப் பேச்சு நடத்தப்படும் சாத்தியமே இல்லை என்று ''சண்டே டைம்ஸ்'' தெரிவித்துள்ளது.

என்றாலும்—! ''சந்தர்ப்பத்தை தவறவிட்டு விட்டோம். இன்னொரு சந்தர்ப்பம் கிடைக்கும் என்று நாம் நம்புகின்றோம்'' — என்று சபாநாயகரின் நெருங்கிய வட்டாரங்களை மேற்கோள் காட்டி சண்டே ஒப்சேர்வர் தகவல் வெளியிட்டிருக்கிறது.

இதே வேளை தென் மாகாணசபைத் தேர்தல் முடிவு, விடுதலைப்புலிகள் பற்றிய அரசின் நிலைப்பாட்டை மாற்றவில்லை.

குறைந்த பட்சம் எதிர்வரும் மாதங்களில் விடுதலைப் புலிகளை பேச்சுவார்த்தை மேசையில் அல்ல, யுத்தகளத்தில் அரசாங்கம் சந்திக்க இருக்கின்றது என்றும் அந்தப் பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ★

முற்போக்கு எழுத்தாளரில் டானியல் முக்கியமானவர்

நினைவுக் கூட்டத்தில் பேராசிரியர் சிவத்தம்பி

யாழ்ப்பாணம், ஏப். 6

''1948க்குப் பின் தோன்றிய ஈழத்து முற்போக்கு எழுத்தாளர்களில் டானியல் மிக முக்கியமானவர்''

யாழ். பல்கலைக்கழகத் தமிழ் மன்றம் கடந்த 23ஆம் திகதி கைலாசபதி கலையரங்கில் நடத்திய டானியல் நினைவுதினக் கூட்டத்தில் ''தமிழ் நாவல் பரப்பில் கே. டானியல்'' எனும் பொருளில் தொடக்க உரை நிகழ்த்திய பேராசிரியர் கா. சிவத்தம்பி இவ்வாறு குறிப்பிட்டார்.

மன்றத் தலைவர் திரு சிவகரன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அவர் மேலும் கூறியதாவது

எழுத்தாளர் டானியல் மாக்சிஸக் கட்சி ஒன்றோடும் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்துடனும் சேர்ந்து செயற்பட்டார்

பேராசிரியர் அ. சண்முகதாஸ் அறிமுகவுரை நிகழ்த்தினார்.

''ஈழத்து ஆக்க இலக்கியவாதிகள் வரிசையில் டானியலுக்கு கட்டாயம் ஒரு இடத்தை எந்த ஆய்வாளனும் கொடுப்பார். ஈழத்துத் தமிழ் இலக்கியத்தைப் படிப்பவர்கள் டானியலைப் படிக்காமல் விடமுடியாது'' என்று அவர் கூறினார்.

''டானியல் எழுத்தாற்றல்— ஒரு மதிப்பீடு'' என்ற பொருளில் நினைவுரை நிகழ்த்திய யாழ் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி நா. சுப்ரமணியன் தமது உரையில் வருமாறு கூறினார்.

''டானியல் ஒரு சகாப்தம் அவர் ஈழத் தமிழ்ப் படைப்பு வரலாற்றிலே தனித்துவமான ஒருவர்.''

மன்றச் செயலாளர் திரு பா. மாலிங்கசிவம் நன்றியுரை கூறினார். (க-51)

யாழ். ஆஸ்பத்திரியில்

மார்ச் மாதத்தில் மட்டும் 31 ஆயிரம் பேருக்கு சிகிச்சை

யாழ்ப்பாணம், ஏப். 6

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் வெளி நோயாளர் பிரிவில் சென்ற மார்ச் மாதத்தில் மட்டும் 31ஆயிரத்து 318 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர்.

வைத்தியசாலையின் வார்ட்டுகளில் 5,788 பேர் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வைத்தியசாலையின் வெளி நோயாளர் பகுதி புள்ளி விவரங்களில் இருந்து இது தெரிய வந்துள்ளது.

தற்போது நிலவும் கடும் வரட்சியால் யாழ் குடாநாட்டில் காய்ச்சல், தடிமல், கண்நோய் போன்ற நோய்களுக்கு இலக்காகி சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கையே அதிகம் என்று தெரிவிக்கப்பட்டது. (த-17)

சர்வசன வாக்கெடுப்பு தேவையா? இல்லையா?

ஜனாதிபதி பரிசீலிக்கிறார்

கொழும்பு, ஏப் 6

வடக்கு - கிழக்கு இணைப்பு குறித்து கிழக்கில் சர்வசன வாக்கெடுப்பு நடத்த வேண்டாம் என்று விடுக்கப்பட்ட கோரிக்கை ஒன்றை ஜனாதிபதி விஜேதுங்கா பரிசீலனை செய்து வருகின்றார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கிழக்கில் நடந்த உள்ளுராட்சித் தேர்தலின்போது ஏறாவூர் பிரதேச சபை நிர்வாகத்தைக் கைப்பற்றிய சுயேச்சைக் குழுவின் தலைவர் எஸ் அலிஸஹிர் மௌலானா அண்மையில் ஜனாதிபதியைச் சந்தித்து இக்கோரிக்கையை விடுத்தார் என்றும் —

அப்போது ஜனாதிபதி அவரது கோரிக்கையை பரிசீலனை செய்வதாக உறுதியளித்தார் என்றும் தெரிவிக்கப்படுகிறது

ஜனாப் மௌலானா இப்போது ஐ தே கட்சியில் சேர்ந்து விட்டார்.

கிழக்கில் சர்வசனவாக்கெடுப்பு நடத்தப்படும் பட்சத்தில், விடுதலைப் புலிகள் மீதுள்ள அச்சம் காரணமாக கிழக்கு மாகாண மக்கள் இணைப்புக்கு ஆதரவாகவே வாக்களிக்க நிர்ப்பந்திக்கப்படுவர் என்றும் அவர் தெரிவித்தார். (இ-எ)

உருவாக்கிய ஊரையே இழந்து அகதி முகாமில் வாழும் தமிழர்!

திருகோணமலை மாவட்டத்தின் தமிழ்க்கிராமம் ஒன்றின் இன்றைய அவல நிலை பற்றி அண்மையில் அங்கு விஜயம் செய்த சிங்களப் பத்திரிகையாளர் இருவர்— சி தொடவத்த, மஹேந்திர ஜயசுந்தர — ''யுக்திய'' சிங்கள வார இதழில் எழுதியிருக்கின்றனர். அதன் தொகுப்பு இங்கு தரப்படுகிறது.

1965க்கு முன்பு அந்த பகுதி காடாக இருந்தது. மிருகங்களே அங்கு வசித்தன.

அயல் கிராமங்களில் வாழ்ந்து வந்த தமிழ் மக்களில் பலர், இடப்பிரச்சினை காரணமாக இங்கு குடியிருக்க சென்றனர். அவர்களில் பெரும்பாலோர் விவசாயிகள் ஆவர். காட்டைத் திருத்தி கனிகள் ஆக்கிய அவர்கள், நெற்செய்கையில் ஈடுபட்டிருந்தனர்.

பத்தினிபுரம் என்ற பெயர் அக்கிராமத்துக்கு இடப்பட்டது.

பன்னிரண்டு ஆண்டுகளின் பின்னர், 1977இல் முதன் முதலாக இக் கிராமத்துக்கு ஆபத்து வந்தது. அந்த ஆண்டில் ஏற்பட்ட இனக்கலவரம் இங்கு வாழ்ந்த தமிழர்களை அச்சத்துக்கு உள்ளாக்கியது. நல்லவேளையாக அசம்பாவிதங்கள் ஏதும் அப்போது இடம் பெறவில்லை

ஆனால் 1983இல் இனக்கலவரம் ஏற்பட்ட போது இங்கு வாழ்ந்த தமிழர்கள் அச்சம் காரணமாக அயல் கிராமங்களுக்கு இடம் பெயர்ந்தனர். எனினும் விரைவில் அவர்கள் மீண்டும் தமது கிராமத்துக்குத் திரும்பி விட்டனர்

1895 1988 ஆம்- ஆண்டுகளில் இனவாதப் பயமுறுத்தலுக்கு உள்ளான இவர்கள் 1990 ஆம் ஆண்டில் தாம் உருவாக்கிய கிராமத்தை விட்டு முற்றாக— 196 தமிழ்க் குடும்பங்களும்— வெளியேற வேண்டியதாயிற்று.

மீண்டும் யுத்தம் ஆரம்பமானபோது இராணுவத்தினர் இக்கிராமவாசிகளை வேறிடத்தில் உள்ள அகதி முகாம் ஒன்றுக்கு மாற்றிவிட்டனர்.

இரண்டு ஆண்டுகளின் பின்னர் அவர்களில் 148 குடும்பங்களே இக்கிராமத்துக்கு மீண்டும் திரும்பின.

திருமலை மாவட்டத்தில் பத்தினிபுரம் கிராமம்

மிகுதி 148 குடும்பங்கள் என்னவாயின?

சிலர் கிழக்கில் வேறு இடங்களுக்கு சென்றிருக்கலாம். மற்றும் சிலர் வட பகுதிக்கு போயிருக்கலாம் இன்னும்சிலர் இந்தியா சென்றிருக்கலாம். எஞ்சியோர் எங்கு போனார்கள்?

கட்டடம் எதுவும் இல்லை

இக்கிராமத்தில் [illegible] கட்டடங்கள் எதுவும் இல்லை. இருப்பது கற்களால் கட்டப்பட்ட ஒரேயொரு பாடசாலைக் கட்டடம் மட்டுமே. அதுவும் இராணுவ முகாமாக உள்ளது அதற்கு எதிர்ப்புறத்தில் தற்காலிகமாக அமைக்கப்பட்ட கொட்டகையில் அகதி முகாம் இயங்கி வருகின்றது.

அம்முகாமில் உள்ள ஒரு தமிழ்க் குடும்பத்தைச் சந்தித்தோம்.

குடும்பத்தின் தலைவர் நோய்காரணமாக மரணமாகி விட்டார். தாயார் இருக்கிறார். அவருக்கு நான்கு மகள்கள் உண்டு. இளைய மகள் கருணாகரிக்கு வயது 21.

இவரது கணவர் சிவானந்தன் கூலி வேலை செய்து வந்தார். ஒரு நாள் வேலை காரணமாக நகருக்குச் சென்ற அவர் இன்னும் வீடு திரும்பவில்லை அவருக்கு என்ன நடந்ததோ தெரியவில்லை.

மூத்த மகள் கணேஸ்வரி. இவரது கணவர் கதிரன் மார்க்கண்டு ஒரு விவசாயி 1985இல் தம்பலகமத்தில் வயலில் வேலை செய்து கொண்டிருந்தபோது துப்பாக்கி வெடிபட்டு அவர் இறந்து போனார். அவருக்கு ஏழு குழந்தைகள்.

இன்னொரு மகள் இராஜேஸ்வரியின் கணவர் மார்க்கண்டு ஜெயம் 1988இல் ஒரு நாள் தம்பலகமம் கிராமத்துக்கு பொருள்கள் வாங்கச் சென்ற அவர் இன்னும் வீடு திரும்பவில்லை.

கடைசி மகள் பரமேஸ்வரியின் கணவர் ஒரு அதிஷ்டம் உள்ளவர் அதாவது அவர் நோய்வாய்ப்பட்டே இறந்தார். இவர்களுக்கு இரண்டு குழந்தைகள் உள்ளன.

துன்பத்தில் உழலும் தாயும் மகள்மாரும் பேரப்பிள்ளைகளும் நாற்று நடுதல் போன்ற அன்றாட தொழில் மூலமே வாழ்க்கை ஓட்டுகின்றார்கள்

இளைஞர்கள் இல்லை

வயோதிபர்களே இக்கிராமத்தில் உள்ளனர். இளைஞர்களையே காணமுடியவில்லை

எமது பயணத்தில் ஒரே ஒரு இளைஞனையே காணமுடிந்தது.

பாடசாலைக் கட்டடம் இராணுவ முகாமாக உள்ளதால் ஓலைக் குடிசை ஒன்றில் மாணவர்கள் சுமார் 50 பேர் படித்து வருகின்றனர்.

கிராமத்தை விட்டு வெளியேறும் போது, ஒரு சிறுவனை வழி மறித்துக் கேட்டோம். ''பாடசாலைப் படிப்பை முடித்துக் கொண்ட பின்னர் பெரியவனானதும் நீ என்ன செய்யப் போகின்றாய்?''

''பெரியவனாகி...... பெரியவனாகி...... என்று மேலே இழுத்தவன், அதற்கு மேலே ஒன்றும் கூறமுடியாமல் நிலத்தைப் பார்த்தான்.

...அதன் பின்னர் நீண்ட சப்தம்.

நாம் 'ரன்முத்துகம' கிராமத்தை விட்டுப் புறப்பட்டோம் ஆம். தமிழர்கள் உருவாக்கிய தமிழ்க் கிராமமான 'பத்தினிபுரம்', இப்போது 'ரன்முத்துகம' என்ற சிங்களப் பெயராக மாறியுள்ளது.

கள் உற்பத்தி அதிகரிப்பு

தெல்லிப்பளை, ஏப். 6

கள் உற்பத்தி அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. தேவைக்கு அதிகமாகக் கள் உற்பத்தியாவதால் தவறணைகளில் பெருமளவு கள் கொட்டப்படுகின்றது

கருப்பணி உற்பத்தி ஆரம்பிக்கப்படாததாலேயே கள்ளை வீணாக ஊற்ற வேண்டி உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (த-68)

தகனக் கட்டணம்

கல்வியங்காடு, ஏப். 6

எதிர்வரும் தமிழ் புத்தாண்டிலிருந்து செம்மணி இந்து மயானத்தில் தகனக் கட்டணம் அறவிடுவதற்கு செம்மணி இந்து மயான அபிவிருத்தி சபை தீர்மானித்துள்ளது.

வலி கிழக்கு பிரதேச சபையின் அங்கீகாரத்துடன் இது நடைமுறைப்படுத்தப்பட உள்ளதாக செம்மணி இந்து மயான அபிவிருத்தி சபை தெரிவித்துள்ளது. [க-77]

பாராட்டுகிறோம்

யாழ் / சுருவில் றோ. க. பாடசாலை ஆசிரியை
திருமதி றீ. பிரான்சிஸ்
அவர்கள்
36 வருட ஆசிரிய சேவையின் பின்
04 - 04 - 94 இல் ஓய்வுபெற்றுள்ளார்
அவருடைய சேவையையும் சமூகத் தொண்டினையும் பாராட்டுகிறோம். சுகமே நீடு வாழ்க என வாழ்த்துகிறோம்.

சுருவில் மக்கள்
பாடசாலைச் சமூகம்
(30263)

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்
ஆண்டுப் பொதுக் கூட்டம்

இடம்: யா / மகாஜனக் கல்லூரி, மருதனார்மடம்.
காலம்: 17 / 04 / 1994 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம்: காலை 8 30 மணி

கல்லூரி பழைய மாணவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: பொதுக்கூட்டத்திற்குச் சமர்ப்பிக்க இருக்கும் பிரேரணைகள் 12 / 4 / 94ற்கு முன் கௌரவ இணைச் செயலாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

சி. யோகநாதர், சி. உருத்திரலிங்கம்
(கௌரவ இணைச் செயலாளர்)
செ. சிவபாலன்
(தலைவர்)
(சி/2079)

ஹரியற் உவின்சிலோ அம்மையார்
நினைவு தினம்

1824இல் உடுவில் மகளிர் கல்லூரியை ஸ்தாபித்த ஹரியற் உவின்சிலோ அம்மையார் நினைவுதினம் 09-04-94 சனிக்கிழமை பி. ப. 4-00மணிக்கு கல்லூரி மண்டபத்தில் அனுஷ்டிக்கப்படுகின்றது.

நிகழ்வுகள்
நினைவுப் பேருரை
பேராயர் கலாநிதி எஸ். ஜெபநேசன்
நாடகம்
உடுவில் மகளிர் கல்லூரி மாணவிகள்

பழைய மாணவிகள், அன்பர்கள் அழைக்கப்படுகின்றனர்.

அ ஜெயக்குமாரன்
செயலாளர் - தெ இ. யா. ஆ.
(சி/7681)

பேணுநர்கள் தேவை

3 மாதம் தொடக்கம் 12 வயது வரையிலான பிள்ளைகளைப் பராமரிப்பதற்குரிய பேணுநர்கள் தேவை மாதாந்த ஊதியமாக ரூபா 2500/- வழங்கப்படும் சேவைக்காலத்தைப் பொறுத்து படிகள் வழங்கப்படும்.

உங்கள் விண்ணப்பங்களை 10-04-94 ஞாயிற்றுக்கிழமைக்கு முன் அனுப்பிவைக்கவும் கல்வித் தரத்தை பொறுத்து முன்னுரிமை வழங்கப்படும்.

செஞ்சோலை நிர்வாகத்தினர்

அனுப்பவேண்டிய முகவரி:-
ஈழநாதம்,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.
(30261)

வர்ணப்பட பிரதியாக்கல் நேரடி
தொடர்புக்கு
COLOUR PHOTO PRINTING
COLOMBO
கொழும்பு பிரதியாக்கல்
நிலையங்களுடன் நேரடி தொடர்புகளை
ஏற்படுத்திக் கொள்ள
எமது புதிய திட்டம் வழிவகுக்கும்
விவரங்களுக்கு தொடர்பு கொள்ளுங்கள்:
கலக்சி புகைப்பட சேவை
337/1, கஸ்தூரியார் வீதி, கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.
குறிப்பு: தனி நெகடிவ்களும் (SINGLE FRAME) பிரதியாக்கத்திற்கு ஏற்றுக் கொள்ளப்படும்.
(30259)

ஸ்ரீலங்காவுக்கு சீன ஆயுதங்கள்:
இந்தியா உன்னிப்பாக அவதானிப்பு

கொழும்பு, ஏப். 6

சர்வதேச ரீதியில் ஸ்ரீலங்கா வேகமாக செய்து வரும் ஆயுதக் கொள்வனவு இந்தியாவை ஆழ்ந்து சிந்திக்க வைத்திருக்கிறது.

— இவ்வாறு மேற்கு நாட்டு ராஜதந்திரி ஒருவர் கருத்து தெரிவித்தார் என்று கொழும்பு தமிழ் வார இதழ் ஒன்றில் வெளியான கட்டுரை ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்தக் கட்டுரையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தனது அயல் நாடான சீனாவில் இருந்து கப்பல்களைக் கொள்வனவு செய்வது குறித்து இந்தியா மிகவும் சிரத்தையுடன் கண்காணிப்பதாக ராஜதந்திர வட்டாரங்களில் பேசப்படுகின்றது: ஏனெனில் சீனாவில் இருந்து கொள்வனவு செய்யப்படும் கப்பல்கள் பாக்கு நீரிணையிலேயே சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன.

இந்தியாவுடன் எல்லைப் பிரச்சினை தொடர்பாக யுத்தம் செய்த நாட்டில் இருந்து வாங்கப்பட்ட கப்பல்கள் நடமாடுவது குறித்து இந்தியா விழிப்புடன் செயற்பட வேண்டும் என ஆலோசனை வழங்கப்பட்டிருப்பதாக கொழும்புக்கு கிடைத்துள்ள செய்திகள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையில், இலங்கையின் சர்வதேச ஆயுதக் கொள்வனவு குறித்து இந்தியா அக்கறை கொண்டு அவதானித்து வருவதாக தமிழ் அரசியல் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

இலங்கையின் சமீப காலப் போக்குக் குறித்து இந்தியா கரிசனை காட்டுவதில் தவறேதும் இல்லை எனவும் அந்த தமிழ் அரசியல்வாதி தெரிவித்தார்.

இது இவ்வாறிருக்க, என்ன எதிர்ப்பு இருந்த போதிலும் இம்மாத இறுதிக்குள் அனைத்து ஆயுதங்களும் இங்கு வந்து சேர்வது உறுதி என பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வடபகுதி மீதான யுத்தத்தை முன்னெடுத்துச் செல்லும் கொள்கையில் தென்பகுதி மாகாண சபையில் கண்ட தோல்வியின் பின்னரும் கூட, அரசாங்கம் மாற்றம் ஏற்படுத்திக் கொண்டதாகத் தெரியவில்லை.

மாறாக வடபகுதியில் புலிகளை வென்று ஓர் 'இமேஜ்' நாட்டு மக்கள் மத்தியில் ஏற்படுத்தவே அரசு திட்டமிட்டு வருகிறது. இதனால் அழியப் போவது அப்பாவித் தமிழ் மக்களே என கொழும்பில் உள்ள தமிழ் அரசியல் வாதிகள் பலர் கருத்து தெரிவிக்கின்றனர்.

— இவ்வாறு அந்தக் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ)

பதில் சுகாதார பணிப்பாளர்

யாழ்ப்பாணம், ஏப். 6

வட பிராந்திய சுகாதாரத் திணைக்களத்தின் பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளராக இது வரை காலமும் கடமையாற்றி வந்த வைத்திய கலாநிதி பொ. இரத்தினசபாபதி கடந்த திங்கட்கிழமையுடன் ஓய்வு பெற்றார்.

அவரின் இடத்திற்கு புதிதாக ஒருவர் நியமிக்கப்படும் வரை பதில் பிரதிமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளராக டாக்டர் நா. விவேகானந்தன் கடமையாற்றுவார்.

இவர் வடபிராந்திய சுகாதாரத் திணைக்களத்தின் தாய் சேய்நல வைத்திய அதிகாரியாகவும், மானிப்பாய் சுகாதாரவைத்திய அதிகாரியாகவும் கடமையாற்றி வந்தார்.

இதேவேளை ஓய்வு பெற்ற பணிப்பாளரின் இடத்திற்கு புதியவர் ஒருவரை நியமிப்பதற்காக தகுதியானவர்களிடமிருந்து சுகாதார மகளிர் விவகார அமைச்சு விண்ணப்பங்களை கோரியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(அ-162-17)

பகிரங்க ஏலம்

வடமராட்சி, ஏப். 6

கரவெட்டி கிழக்கு யார்க்கரு வித்தியாலயத்தில் உள்ள பழைய தளபாடங்கள் சில கரவெட்டி கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். சிவராசா முன்னிலையில் இம் மாதம் 12ஆம் திகதி பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

4 போர்க் கப்பல்களை வாங்க
சீனாவுடன் ஒப்பந்தம் கைச்சாத்து

கொழும்பு, ஏப். 6

சீனாவிடம் இருந்து நான்கு போர்க்கப்பல்களைக் கொள்வனவு செய்யும் உடன்படிக்கை ஒன்றில் சீனாவும் இலங்கையும் கடந்த சனிக்கிழமை கைச்சாத்திட்டன.

இலங்கைக் கடற்படையின் தளபதி மொஹான் சமரசேகரா, பீஜிங்கில் உள்ள இலங்கைத் தூதர் விக்ரெம் லூட்டர்ஸ் ஆகியோர் இலங்கைஅரசின் சார்பிலும்—

சீன மக்கள் விடுதலை இராணுவத்தின் அதிகாரிகள் சீனாவின் சார்பிலும் இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர்.

இந்த உடன்படிக்கையின் கீழ்— 60மீற்றர் நீள ஹினான் ரக நீர்மூழ்கியைத் துரத்திச் செல்லும் வகை பீரங்கிப் படகு ஒன்று—

இரண்டு அதிவேக பீரங்கிப் படகுகள்—

250 தொன் எடையுள்ள துருப்புகளைத் தரையிறக்கும் கப்பல்— ஆகியவற்றை இலங்கை வாங்கும்.

துருப்புகளைத் தரையிறக்கும் கப்பல் இன்னும் மூன்று மாதங்களில் இலங்கை வந்து சேரும் என்றும்—

ஏனைய மூன்று பீரங்கிப் படகுகளும் அடுத்த ஆண்டிலேயே இலங்கைக்குக் கிடைக்கும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இவற்றிற்கான கொடுப்பனவுகளை இலங்கை அரசு எட்டு முதல் பத்து வருடகாலப் பகுதியில் சீனாவுக்கு வழங்கும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இப் போர்க் கப்பல்களைக் கொள்வனவு செய்யும் பேச்சுக்களை நடத்த சீனா சென்றிருந்த இலங்கைக் கடற்படை அதிகாரிகள் உயர் நிலைக் குழு நேற்று கொழும்பு திரும்புவதாக இருந்தது.

இக் குழுவில் கடற்படைத் தளபதியும் நான்கு கடற்படைக் கப்டன்களும் இடம் பெற்றிருந்தனர்.

(இ-எ)

கொடிக் கப்பலாக
சீனப் பீரங்கிப் படகு

கொழும்பு, ஏப் 6

சீனாவில் இருந்து கொள்வனவு செய்யப்படவுள்ள நீர்மூழ்கிகளைத் துரத்திச் செல்லும் பீரங்கிப்படகு இலங்கைக் கடற்படையின் புதிய கொடிக்கப்பலாக பயன்படுத்தப்படும் என்று தெரியவருகிறது.

1978ஆம் ஆண்டில் கஜபா என்ற யுத்தக்கப்பல் சேவையில் இருந்து நீக்கப்பட்டதைத் தொடர்ந்து, இலங்கைக் கடற்படை ஒரு கொடிக்கப்பல் இன்றியே இருந்து வருகின்றது.

கடற்படையின் தற்போதைய பலத்துக்கு, கொடிக் கப்பல் ஒன்று தேவை என்று கடற்படை அதிகாரிகள் உணருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது கடற்படையில் 700 அதிகாரிகளும், 9 ஆயிரம் படையினரும் உள்ளனர்.

கடந்த பதினாறு ஆண்டுகளாக கடற்படையிடம் இருந்து வரும் கப்பல்களில், எதுவும் கனரக ஆயுதங்களுடன் கொடிக் கப்பல் என்ற தரத்துக்கு அமையவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

(இ-எ)

இன்னும் சில தினங்களில்
4 ரஷ்ய விமானங்கள் கொழும்பு வந்து சேரும்

கொழும்பு, ஏப். 6

ரஷ்யத் தயாரிப்பான எம். ஐ. 17 ரக விமானங்கள் நான்கு இன்னும் சில தினங்களில் கொழும்பு வந்து சேரவுள்ளன என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த விமான கொள்வனவு சம்பந்தமான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட கடந்த மாதம் விமானப்படையின் தலைமை அதிகாரி ஏயர் வைஸ் மார்சல் என்சயன் பிரிஸ் ரஷ்யா சென்றிருந்தார்.

கடந்த வருடத்திலும் இதே ரகத்தைச் சேர்ந்த மூன்று விமானங்களை ஸ்ரீலங்கா விமானப்படை கொள்வனவு செய்திருந்தது குறிப்பிடத்தக்கது.

(ஓ)

தமிழக பத்திரிகைகள் மீது குற்றவியல் நடவடிக்கை!
மாநில அரசு எடுக்குமாம்

சென்னை, ஏப் 6

எதிர்க்கட்சித் தலைவரின் அறிக்கைகளை வெளியிடும் பத்திரிகைகளுக்கு எதிராக குற்றவியல் (கிரிமினல்) வழக்குகள் தொடரப்படும் என்று தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

இந்த அச்சுறுத்தல் நடவடிக்கையை இந்திய பத்திரிகைக் கவுன்சில் கண்டித்

(5ஆம் பக்கம் பார்க்க)

காலத்திற்கு ஒவ்வாதவை என்று
கழித்துவிடப்பட்ட டாங்கிகள் இலங்கைக்கு விற்பனை?

ரி55ரக போர் டாங்கிகளை மூன்றாம் உலகநாடுகளுக்கு விற்பனை செய்வதில் ரஷ்யா, சீனா போன்ற நாடுகள் முயன்று வருகின்றன. என்று கூறப்படுகிறது.

இந்த ரக டாங்கிகளை கொள்வனவு செய்வதன் மூலம் பொதுப்பணமே விரயமாகிறது என இலங்கையில் உள்ள ஆயுத விற்பனையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

உலக சந்தையில் இந்தரக டாங்கிகளுக்கு உதிரிபாகங்கள் கிடைப்பதில் பெரும் தட்டுப்பாடு நிலவி வருகிறது என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

ரி55ரக டாங்கிகளை தகர்க்கக் கூடிய ஆயுதங்கள் இப்போது சர்வதேச கெரில்லாக்கள் வசம் இருப்பதால், புலிகளுக்கும் அவ்வாறான ஆயுதங்கள் கிடைத்திருக்கக் கூடும் என இராணுவ வட்டாரங்களில் கேள்வி எழுப்பப்படுகிறது.

உலக நாடுகளில் முன்னர் ரி55ரக டாங்கிகளே பாவிக்கப்பட்டு வந்தன. இவை காலத்திற்கு ஒவ்வாதவை என ஒதுக்கி வைக்கப்[illegible]யில் ரி74ரக டாங்கி[illegible] போது பாவிக்கப்பட்டு வருகின்றன.

ரி74ரக டாங்கிகள் நீரிலும் நிலத்திலும் செல்லக் கூடியன அத்துடன் "ரேடர்" கருவியும் பொருத்தப்பட்டுள்ளது. இதன்மூலம் எதிரிகள் டாங்கிகளைத் தாக்க முற்படுவதை இந்த 'ரேடர்'கள் காட்டிக் கொடுத்து விடும்.

இவ்வாறான டாங்கிகளை வாங்காது பழைய ரக டாங்கிகளை வாங்குவது யுத்தத்திற்கு பொருத்தம் இல்லை என இராணுவ அதிகாரிகள் குமுறுகின்றனர்.

கொழும்பு வார இதழ் வெளியா[illegible] தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

(ஓ)

தமிழிசை விழாவில் இன்று

யாழ்ப்பாணம், ஏப். 6

யாழ்ப்பாணம் அண்ணாமலை இசைத் தமிழ் மன்றத்தின் தமிழிசை விழாவில் இன்று 6 ஆம் திகதி செல்வி த. சந்தானலட்சுமி, திரு. எம் ஸ்ரீ ரங்கநாதன் ஆகியோரின் பாட்டு இடம்பெறும்.

(க-111)

30 குடும்பங்களுக்கு வீடுகள்

தென்மராட்சி, ஏப். 6

தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பளைப் பிரிவினர் கிளாலியில் முப்பது வீடுகளை அமைத்து வருகின்றனர்.

கடந்த வருடம் இடம்பெற்ற யாழ்தேவி நடவடிக்கையின் போது கிளாலிப் பகுதியில் வீடுகளை இழந்த குடும்பங்களுக்கே இவ்வீடுகள் அமைக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டது.

(க-117)

ராவ் அமெரிக்கா விஜயம்

புதுடில்லி, ஏப். 6

இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரன் விடுத்த அழைப்பை ஏற்று மே மாதம் 6 ஆம் திகதி அமெரிக்கா செல்கிறார்.

காஷ்மீர் பிரச்சினை காரணமாக அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவுகள் சமீபகாலமாக சீர்குலைந்திருந்தன.

கஷ்மீர் பிரச்சினை தொடர்பாக இந்தியாவுக்கு எதிராக அமெரிக்கா கருத்துத் தெரிவித்து வந்ததே உறவுகள் சீர்குலையக் காரணமாக இருந்தது.

அமெரிக்க உதவி அமைச்சர் திருமதி ரொபின் ராபேல் சமீபத்தில் இந்தியாவுக்கு விஜயம் செய்ததை அடுத்து இந்தியா — அமெரிக்க உறவுகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

(இ)

விசேட மலிவு விற்பனை

ரவுசர் (நீளக்காற் சட்டை)
அளவு: 28, 30, 32, 34
✲ விலை 200/-
(சொற்ப கையிருப்பே உண்டு)

லிங்கம்ஸ் சில்க் கவுஸ்
நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
[7185]

தொழில் நுட்பக் கல்லூரி
மண்ணெண்ணெய் விநியோகம்

எதிர்வரும் நாட்களில் கீழ் உள்ளோருக்கு மண்ணெண்ணெய் விநியோகிக்கப்படும்.

வெள்ளி — 08 — 04 — 1994
ஞாயிறு — 10 — 04 — 1994
10 — 4 மணி

1. 93/94 இறுதிப் பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்கள் — 4 லீற்றர்
2. சென்ற தடவை மண்ணெண்ணெய் பெறாதவர்கள் — 2 லீற்றர்

— மாணவர் அவை,
[7184]

31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்:
16 — 09 — 1955

மறைவு:
07 — 03 — 1994

கலாநிதி
திருமதி சுலோஜனா மகேந்திரன்
(சிரேஷ்ட விரிவுரையாளர்,
யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடம்)

அன்பின் திருவுருவாய், பாசத்தின் சிகரமாய் எங்கள் குடும்ப ஒளிவிளக்காய் எம்மைப் பண்போடும், பாசத்தோடும் அரவணைத்த அன்புத் தெய்வமே! ஆறாத் துயரில் எம்மை ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்டுவிட்ட தங்களின் பாச நினைவுகள் எங்கள் நெஞ்சங்களில் என்றும் நீங்கா!

தங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்.

அன்புக் கணவன், பிள்ளைகள்,
பெற்றோர், சகோதரி, மைத்துனர்,
உறவினர்கள்.

தேவாலய வீதி,
சுண்டிக்குளி.
[30256]

சின்னஞ்சிறு விளம்பரம்

விற்பனைக்கு

எஞ்சின் நல்ல நிலையில் இருக்கும் Fiat 600, EN 6486 (நி1 — 6860) இலக்கமுடைய கார் விற்பனைக்குண்டு: தொடர்பு: த. கணநாதன், கல்வளை, சண்டிலிப்பாய். (7180)

அடை வைக்கக்கூடிய நல்ல இன கோழி முட்டைகள், பண்டம் முட்டைகள், வான் கோழி முட்டைகள் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (30190)

கானல்

கே. டானியலின் கானல் வெளிவந்து விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (சி-7471)

கோழிக்குஞ்சு விற்பனை

Prima Broiler குஞ்சுகள் உடன் பெற்றுக்கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (30235)

ஒரு நாள் புரொயிலர் கோழிக்குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. ஆஷா கோழிப் பண்ணை, முதலாம் கட்டை, பிரதான வீதி, பருத்தித்துறை. (30239)

இறைச்சிக் கோழிகள்

Broiler இறைச்சிக்கோழிகள் காலை 7-00—11-00 வரை சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். உங்கள் வசதிக்கேற்ப நல்லூர் வீடியோ சென்ரர் என்ற பெயர்ப் பலகை வாசலில் உண்டு. நல்லூர் வீடியோ சென்ரர், இல. 19, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (30237)

வாழ்த்து மடலகள்

புதுவருட வாழ்த்துமடல்கள் தொகையாகவும் சில்லறையாகவும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ள: மக்மிலன், ஸ்ரீகாந் யாழ்ப்பாணம். (சி-7476)

காவேரி சீயாக்காய்

கண் குளிர்மை, ஞாபகசக்தி, கூந்தல் வளர்ச்சிக்கும், பேன் சொடுகு, அழுக்கு அறவே இல்லாமல் செய்வதற்கும் கேசம் உதிர்வதைத் தடுப்பதற்கும் நீங்கள் பாவிக்க வேண்டியது காவேரி சீயாக்காய்ப் பவுடர். (30161)

ஆனந்தம் சீயாக்காய்

சித்த மருத்துவ மூலிகைகள் சேர்ந்ததால் பேன், சொடுகு, அழுக்கு அகற்றி சுகவாழ்வு தருவதாக பாவித்த பலர் கருத்துக்கள் அனுப்பி உள்ளார்கள். இதுவரை பாவிக்காதவர்கள் ஆனந்தம் சீயாக்காய்ப் பவுடர் என்று கேட்டு வாங்கி பாவித்து உங்கள் கருத்துக்களை ஆனந்தம், கைதடி முகவரிக்கு எழுதவும். (7182)

தேவை

பிரபல நிறுவனமொன்றிற்கு இலிகிதர், அச்சக முகாமையாளர் தேவை. நற்சான்றிதழ்களுடன் அணுகவும். 935, மே/பா, உதயன். (சி-7475)

மணமகள் தேவை

கனடாவில் தொழில் புரிகின்ற மணமகனும், இந்து சமயத்தைச் சேர்ந்தவரும் 7 இல் செவ்வாயுடைய (பாவங்கூடிய) ஜாதகத்தை உடைய நற்குணமுள்ள மணமகனுக்கு பெற்றோர் கௌரவமான, படித்த, அழகிய மணமகளைத் தேடுகின்றார்கள். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: P. செல்லப்பா, 21/1, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். (7055)

தவறிவிட்டது

3-4-94 அன்று ஆவரங்கால் சந்திக்கும் — மாம்பழம் சந்திக்கும் இடையில் 4 grm. தங்க கைச்சங்கிலி தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து என். ஆனந்தன், இல. 156, கண்டி வீதி, மாம்பழம் சந்தி, அரியாலை, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (30241)

SPECIAL ENGLISH

பிரவேச, பால பண்டிதர். N. C. E, (Part-I). G. C. E. (O/L), (A/L) Spoken English, G. A. Q. ஆகியவற்றிற்குரிய விசேட ஆங்கில வகுப்புகள் 07-04-94 ஆரம்பமாகின்றன. புதிய ஆங்கில கல்வி நிலையம், 82, பருத்தித்துறை வீதி, ஆரியகுளம், யாழ்ப்பாணம். (30249)

தராசு படியாக இரும்புத் துண்டு

சுன்னாகம் மரக்கறிச் சந்தையில் தராசுப் படிகளுக்குப் பதிலாக இரும்புத் துண்டுகள் முதலியன பாவிக்கப் படுகின்றன என அறிய வருகின்றது. அத்துடன் தராசுகள் கட்டித்தூக்கி விடப்படாமல் கைகளில் வைத்து நிறுக்கப்படுகின்றன இவற்றால் குறைந்த நிறையில் பொருள்கள் விற்கப்படுவதாகப் பாவனையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

''தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும்வகை செய்தல் வேண்டும்''

யாழ்ப்பாணம் அண்ணாமலை இசைத் தமிழ் மன்றத்தின்

36 ஆவது ஆண்டு

தமிழ் இசை விழா

இடம்: நல்லூர் பண்டாரக்குளம் மருதவளவு விநாயகர் ஆலய முன்றில்

காலம்: 01-04-1994 முதல் 15-04-1994 வரை

06 — 04 — 1994 புதன்கிழமை

ஆறாம் நாள் நிகழ்ச்சிகள்

மாலை 7-00 மணி

அண்ணாமலை இசைக் கல்லூரி மாணவர்கள்] பாட்டு. மிருதங்கம்

7-30 மணி

செல்வி சந்தானலட்சுமி தம்பிராசா — பாட்டு
செல்வி சுபத்திரா கணேசன் — வயலின்
செல்வன் மெ. கஜன் — மிருதங்கம்

8-15—9-30 மணி

திரு. M. ஸ்ரீரங்கநாதன் — பாட்டு
திரு. S. வெங்கடேஸ்வரசர்மா — வயலின்
செல்வன் S. நாகராஜன் — மிருதங்கம்
திரு. A. செல்வரத்தினம் — கடம்

வாழ்த்துவோர்:

யது நுண்கலை நிலையம்.
618, நாவலர் றோட்,
யாழ்ப்பாணம்.

(சி/7656)

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்: 15 — 08 — 1909

மறைவு: 07 — 03 — 1994

திருமதி நாகரெத்தினம் சுப்பையா

(மாம்பழம்)

அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இன்று (06-04-1994) புதன்கிழமை காலை 11-00மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு மிக அன்புடன் அழைக்கின்றோம்.

-குடும்பத்தினர்.

"சுந்தரபவனம்"
கே. கே. எஸ், வீதி,
கொக்குவில். (30246)

இடம்பெயர்ந்தவர்களுக்கு பராமரிப்பு முகாம்

யாழ்ப்பாணம், ஏப். 6

யாழ்ப்பாணம் ரயில்வே நிலையத்தில் இடம்பெயர்ந்தோர் பராமரிப்பு முகாம் ஒன்றை யாழ். பிரதேச செயலகம் அமைத்துள்ளது.

இம்முகாமில் சுமார் 144 குடும்பங்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

முகாமில் தங்கியிருக்கும் மக்களின் குறைபாடுகளை கேட்டறிவதற்கும், சுகாதார வசதிகளை கவனிப்பதற்கும் 11பேர் கொண்ட குழு ஒன்றையும் யாழ். பிரதேச செயலகம் நியமித்துள்ளது. (த-17)

பருத்தித்துறை வரும் கப்பல்கள் மீது அசர படையினர் கெடுபிடி

காங்கேசன்துறையில் இருந்து பருத்தித்துறை வரும் கப்பல்கள் தொடர்பாக படையினர் புதிய கட்டுப்பாடுகளை விதித்துள்ளனர்,

காலை 6மணிக்குப்பின்னரே காங்கேசன்துறையில் இருந்து பருத்தித்துறைக்கு கப்பல்கள் செல்ல வேண்டும் என்றும்— மாலை 6மணிக்கு முன்னர் காங்கேசன்துறைக்கு கப்பல்கள் திரும்பிவிடவேண்டும் என்றும்—படையினர் கட்டுப்பாடு விதித்துள்ளனர்.

இதனால் தற்சமயம் காலை 7-30மணிக்கு பின்னரே கப்பல்கள் பருத்தித்துறைக்கு வருவதாகவும்—

பின்னர் மாலையில் 4-30 மணிக்கு காங்கேசன் துறைக்கு திரும்புவதாகவும் —தெரிவிக்கப்பட்டது.

இதனால் கப்பல்களில் இருந்து பொருள்கள் இறக்குவது பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

பாதுகாப்பின் நிமித்தமே இப்புதிய உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக படையினர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாம். (இ-3)

அச்சுக்கோப்பாளர்கள்

முன் அனுபவம் உள்ள அச்சுக்கோப்பாளர்கள் தேவை. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். கல்வி மற்றும் தொழில் சான்றுப் பத்திரங்களுடன் இன்றும், நாளையும்காலை 10 மணிக்கும் பிற்பகல் 4 மணிக்கும் இடையில் நேரில் வரவும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

ஆளணி முகாமையாளர்,
உதயன் வெளியீட்டகம்,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்

ஆலயப் பரிசாரகர் தேவை

யாழ். மணிக்கூட்டு வீதி, அரசடி விநாயகர் ஆலயத்திற்கு ஓர் பரிசாரகர் தேவைப்படுகின்றார் வேதனம் நேரில் பேசித் தீர்க்கலாம். உடன் தொடர்பு கொள்ளவும்.

-பரிபாலனசபை,

டாக்டர். வே. குகமூர்த்தி,
(பொருளாளர்),
259, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். (30753)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்

நல்லூர் பிரிவு

தேவை

சைக்கிள் றிக்சோ சாரதி

ஊக்குவிப்புப்படி பேசித் தீர்க்கப்படும்.

தையல் பயிற்சிக்கு பயிலுநர்கள்

09-04-1994 முற்பகல் 9 மணிக்கு நேர்முகப் பரீட்சைக்கு சமுகம் தரவும். (கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு அருகில்)

- கௌரவ செயலாளர்.

கொக்குவில். [30251]

பழைய மாணவர் சங்க பொதுக் கூட்டம்

அச்சுவேலி மகா வித்தியாலயம்
(அச்சுவேலி மத்திய கல்லூரி)

காலம்: 10 — 04 — 1994 (ஞாயிறு) காலை 10-00 மணி

இடம்: அமரர் S S. துரைசிங்கம் நினைவு மண்டபம் மகா வித்தியாலயம்

பழைய மாணவர்கள் அனைவரையும் அன்புடன் அழைப்பதோடு அங்கத்துவ பணமான ரூபா 10 யும் பொதுக் கூட்டத் தினத்தன்று காலை 10-00 மணிக்கு முன்னர் செலுத்தி அங்கத்துவத்தை உறுதி செய்யவும்.

நன்றி

சிதம்பரம் - சந்திரலிங்கம்,
தலைவர்.

க. செல்வரட்ணம்,
செயலாளர்

[30216]

21 ஆண்டுகளுக்கு மேல் இணையற்ற சேவையாற்றிய O/L வகுப்புக்கு தனித்துவம் பெற்ற நிறுவனத்தில்

O/L DAY CLASS பகல் நேர வகுப்பு

ஆரம்பம் ஏப்ரல் 15இல்

(திங்கள். செவ்வாய், வியாழன், வெள்ளி காலை 8-00 — பிற்பகல் 1-00)

சனி. ஞாயிறு நாட்களில் கணித பாடத்திற்கான இலவச விஷேட செயலமர்வுகள்

ESTD 1973 REGD No J/7999

The Express Institute

MATHS MR. T. VARATHARAJAH

[30252]

உதயன்
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

மக்கள் ஆட்சியின் வரைவிலக்கணம்?

கிழக்கில் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் முடிந்து ஒரு மாத காலமாகி விட்டது. தேர்தலில், எந்தளவுக்கு பலாத்காரம், வன்செயல்கள் நிறைந்திருந்தன என்பது மிகவும் பரம இரகசியமானது. தனக்கு அதிகாரம் இருந்திருந்தால் கிழக்கில் நடைபெற்ற தேர்தலை ரத்துச் செய்திருப்பார் என்று தேர்தல் ஆணையாளர் கூறுமளவுக்கு, அத்தேர்தல் மோசடியும், அதிகார துஷ்பிரயோகமும், அராஜகமும், தில்லுமுல்லுகளும் மலிந்திருந்தன என்பது வெளிச்சமாகிவிட்டது.

கிழக்கு, தனது கட்டுப்பாட்டில் இருக்கிறது. அங்குள்ள மக்கள் இயல்பு நிலையில், சகல வசதிகளுடனும் நிம்மதியாக வாழ்கிறார்கள். அங்கு தமிழர்களுக்குப் பிரச்சினை எதுவும் இல்லை. வடக்கில் நடக்கும் போராட்டம் கிழக்கில் இல்லை. வடக்கு போராட்டம் குறித்து கிழக்கு மக்களுக்கு ஆர்வமோ அக்கறையோ இல்லை — என்று காட்டிக் கொள்வதற்காகவே அரசு இத் தேர்தலை நடத்தியது.

இந்தத் தேர்தலில் ஆளுங் கட்சியே வென்று விட்டால் மக்கள் நிர்வாகம் நடப்பதாகக் கூறி முற்று முழுதான ஓர் இராணுவ ஆட்சியைநடத்துவதும் —

அந்த இராணுவ நிர்வாகத்தில் வடக்கு - கிழக்கைப் பிரிப்பது சம்பந்தமான சர்வசன வாக்கெடுப்பை வெற்றிகரமாக நடத்தி முடிப்பதும் — அரசாங்கத்தின் உள் நோக்கமாக இருந்தது.

ஆனால் அரசு எதிர்பார்த்தது போல ஆளுங்கட்சியால் பல உள்ளூராட்சி சபைகளைக் கைப்பற்ற முடியவில்லை எனினும் அரசாங்கமும், மோசடி நிறைந்த தேர்தல் ஒன்றை நடத்துவதற்கு அரசுக்கு முழு ஒத்துழைப்பையும் வழங்கிய படையினரும் சோர்ந்துவிடவில்லை.

மக்கள் பிரதிநிதிகளே உள்ளூராட்சி நிர்வாகத்தை நடத்துகிறார்கள் என்று காட்டிக் கொண்டு, அங்கு இராணுவ நிர்வாகத்தை நடத்தும் திட்டத்தைத் திறம்பட நடத்துவதற்கான ஏற்பாடுகள், ஒழுங்குகளைச் செய்து வருகின்றன.

தேர்தல் நடந்து முடிந்த பின்னர் படையினரின்ரோந்து அதிகரித்துள்ளது. இராணுவ, பொலிஸ் காவல் நிலைகளின் எண்ணிக்கை உயர்ந்துள்ளது. முன்னரை விடப் படையினரின் கெடுபிடிகள் மலிந்துள்ளன. அடக்குமுறைகள் சிறிதளவும் குறையவில்லை. அங்குள்ள மக்கள் அச்சத்துடனேயே வாழ்கிறார்கள்.

கிழக்கில் இருந்து வந்த மதகுரு ஒருவர் இத்தகவல்களைத் தெரிவித்திருக்கிறார்.

'கிழக்கில் குறிப்பாக மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்ட மக்கள் ஒரு சிறைக்கூட வாழ்க்கையையே நடத்துகிறார்கள். ஒருவித அச்ச உணர்வுடனேயே அவர்கள் தமது வாழ்க்கையைக் கழிக்கின்றனர் — என்று அந்த மதகுரு அங்குள்ள நிலைமையைத் தத்ரூபமாக வெளியிட்டுள்ளார்.

மக்கள் சிறைச்சாலை வாழ்வு நடத்தும் போது கிழக்கில் இயல்பு நிலை நிலவுவதாகக் கூறுவது எப்படிப் பொருந்தும்? அச்ச உணர்வுடன் வாழும் மக்கள் அமைதியை எதிர்பார்ப்பது எப்படி?

அச்ச உணர்வுடன் உள்ளூராட்சி மன்றங்களில் மக்கள் பிரதிநிதிகள் எப்படி நிர்வாகம் நடத்துவது? எவ்வாறு அவர்களுக்குச் சேவை செய்வது?

கொழும்பு அரசாங்கத்தின் ஜனநாயகம், மக்கள் ஆட்சி என்பதற்கு வரைவிலக்கணம் இவை தான்!

கிழக்கில் இராணுவ ஆட்சியை — நிர்வாகத்தை — முற்றாக நிலைநிறுத்தி, மக்களின் உரிமைகளை நசுக்கி, தமிழரின் போராட்டத்தை முறியடிப்பதற்கு முன்னோடியாகவே கிழக்குத் தேர்தல் நடத்தப்பட்டது.

தேர்தலில் தெரிவு செய்யப்பட்டவர்களைப் பொம்மைகளாக வைத்துக் கொண்டே மக்களை மேலும் சிறைப்படுத்தவும், அடக்குமுறையை அதிகரிக்கவும் அரசுக்கு நல்ல சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

சிசிலுக்கு தூதர் பதவி தெரிவுக்குழு அங்கீகாரம்

கொழும்பு, ஏப். 6

முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சிசில் வைத்தியரத்னாவை தாய்லாந்து நாட்டுக்குத் தூதராக நியமனம் செய்யும் அரசின் முடிவை நாடாளுமன்றத் தெரிவுக்குழு அங்கீகரித்து விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த மாதம் 22ஆம் திகதி உயர் நிலைப்பதவி நியமனம் தொடர்பான நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் முன் ஜெனரல் வைத்தியரத்னா தோன்றினார்.

ஜெனரல் வைத்தியரத்னா இராணுவத் தளபதியாக பணி புரிந்த போது இடம்பெற்ற நிகழ்வுகள் பற்றி குழுவின் உறுப்பினர்கள் அவரிடம் விசாரணை செய்தனர் என்றும் —

அதன் பின்னர் அவரின் ராஜதந்திர நியமனம் அங்கீகரிக்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.

தெரிவுக்குழுவின் தலைவராக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா இருக்கிறார்.

புலிகளின் குரல் வானொலியில்

06-04-1994

புதன் இரவு

★ 8 01 — அன்னை பூபதி நினைவாக சிறப்பு நிகழ்ச்சி ''சக்தித்தாய்''
★ 8-10 — தாயகப் பாடல்கள்
★ 8-20 — எரிமுனை நிகழ்ச்சியில் ''இஞ்சியைப் பயிரிடுவோம்'' சித்திரம் இடம்பெறும்
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — நாடகம்-''மருந்துக்கு''

07-04-1994

வியாழக் காலை

★ 7-02 — மாவீர வணக்கம்
★ 7-15 — அன்னை பூபதி நினைவாக சிறப்பு நிகழ்ச்சி ''உயிர் கொடுத்த உத்தமி''
★ 7-25 — விடுதலை கீதங்கள்
★ 7-45 — செய்திகள்
★ 7-50 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-55 — தாயகப் பாடல் என்பன இடம்பெறும்.

நாட்டுப் பற்றுக் கொண்ட மாமனிதர் துரைராஜா!

பிரிவுபசார விழாவில் இலங்குமரன் புகழாரம்

யாழ்ப்பாணம், ஏப். 6

நாட்டுப் பற்றும் கடமை உணர்வும், நல்ல பண்பும் கொண்ட மாமனிதர் பேராசிரியர் துரைராஜா.

தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் திரு. வே. இலங்குமரன் இவ்வாறு கூறினார்.

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்துக்கு இடமாற்றம் பெற்றுச் செல்லும் யாழ். பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜாவுக்கு யாழ் பல்கலைக் கழக சமூகத்தினரும், நலன் விரும்பிகளும் இணைந்து ஏற்பாடு செய்திருந்த பிரிவுபசார விழா அண்மையில் யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.

அந்த விழாவில் கலந்து கொண்டு பொதுமக்கள் சார்பில் பேராசிரியர் துரைராஜாவுக்கு நன்றி தெரிவித்து உரையாற்றுகையிலேயே திரு. இளங்குமரன் முன்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் குறிப்பிட்டதாவது;

ஒரு சிறந்த பொறியியல் வல்லுநரான பேராசிரியரை உலகுக்கு அளித்ததில் தமிழீழமே இன்று பெருமையுடன் தலை நிமிர்ந்து நிற்கிறது.

கடந்த சில நாட்களாக குடாநாடு எங்கும் கடமையுணர்வுடனும், எழுச்சியுடனும் மக்கள் பரவலாக பேராசிரியருக்கு அவரது பணி நலன் பாராட்டி விழாக்களை எடுத்து வருகிறார்கள். அவரது சேவை இந்த வளாகத்தோடு மட்டும் நின்று விடவில்லை. அதற்கு வெளியிலும் அவர் பணி நீடித்திருந்துள்ளது என்பதையே அந்த விழாக்கள் மிகத் துல்லியமாக எடுத்துக் காட்டுகின்றன — என்றார்.

விழாவையொட்டி துணைவேந்தர் பேராசிரியர் துரைராஜாவின் உருவப்படம் பல்கலைக்கழக சபை அறையில் அன்று திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது.

விழா ஆரம்பத்தில் துணைவேந்தரும், பாரியாரும் அவரது உறவினர்களும் மங்கள வாத்தியங்கள் முழங்க வளாகத்தினூடாக ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர்.

பல்கலைக்கழக மைதானத்தில் அமைக்கப்பட்ட மேடையில் விழா நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

கணிதத்துறைப்பேராசிரியர் திரு குணரத்தினம் தலைமையில் நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

பிரிவுபசார விழாவில் பல்கலைக்கழக மாணவர் சார்பில் திரு இ. ரவீந்திரன் —

யாழ். பல்கலைக்கழக உத்தியோகத்தர்கள் சார்பில் பதிவாளர் திரு. க. பரமேஸ்வரன் —

பல்கலைக்கழக ஆசிரியர்கள் சார்பில் கலைப்பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை —

நலன் விரும்பிகள் சார்பில் சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோர் பேராசிரியர் துரைராஜாவின் பணிகளை பாராட்டி உரையாற்றினர்.

பல்கலைக்கழக சமூகம் மற்றும் நலன்விரும்பிகள் சார்பில் வழங்கப்பட்ட அன்பளிப்புப் பொருளை விவசாய பீடாதிபதி பேராசிரியர் மகேஸ்வரன் துணைவேந்தர் துரைராஜாவிடம் வழங்கினார்.

இறுதியில் பேராசிரியர் அ. துரைராஜா உரையாற்றினார். தொடர்ந்து இராமநாதன் நுண்கலைப் பிரிவினரின் இசை நிகழ்ச்சி இடம்பெற்றது. (த-5)

மாதுறு ஓயா வலது கரையில் அபிவிருத்தி வேலைகள்!

டி. பி. அறிவிப்பு

கொழும்பு, ஏப். 6

கிழக்கு மாகாணத்தில் மாதுருஓயா வலதுகரை பிரதேசத்தில் அபிவிருத்திவேலைகளை ஆரம்பிக்க அரசாங்கம் எண்ணியிருப்பதாக ஜனாதிபதி விஜேதுங்கா அறிவித்திருக்கிறார்.

கிழக்கு மாகாணத்தில் உள்ளூராட்சித் தேர்தல்கள் நடைபெற்று முடிந்ததை அடுத்து அரசு இத்திட்டத்தை செயற்படுத்தவிருப்பதாகவும் அவர் கூறினார்.

தெஹியத்தகண்டிய என்னுமிடத்தில் ஒன்பதாவது மகாவலி வாரத்தை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் ஜனாதிபதி இத்தகவல்களை வெளியிட்டார். (த-எ)

பிரேமா சிலை திறப்பு விழாவை குடும்பத்தினர் பகிஷ்கரிப்பர்?

கொழும்பு, ஏப். 6

கொழும்பு, ஹல்ஸ்டோர்ப்பில் அடுத்த மாதம் முதலாம் திகதி இடம்பெறவிருக்கும் முன்னாள் ஜனாதிப்தி பிரேமதாஸாவின் சிலை திறப்பு விழாவில், பிரேமதாஸாவின் குடும்ப உறுப்பினர்கள் கலந்து கொள்ள முடியாத நிலை உருவாகி இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இச்சிலை ஜனாதிபதி விஜேதுங்காவினால் திறந்து வைக்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

''பிரேமதாஸாவுக்கு நன்றியுள்ளவராக இன்னும் விளங்கி வருபவர் உபசபாநாயகரான காமினி பொன்சேகா ஆவார். பிரேமதாஸாவின் உருவச் சிலையைத் திறந்து வைக்கக் கூடிய ஒரே ஒருவர் அவர் தான். அவரைக் கொண்டு சிலையைத் திறப்பது நல்லது'' — என்று பிரேமதாஸாவின் குடும்ப உறுப்பினர்களில் சிலர் கருதுவதாக சண்டே ரைம்ஸ் செய்தி வெளியிட்டிருக்கிறது.

''விழாவுக்கான அழைப்பிதழ்கள் கடந்த வாரம் அனுப்பப்பட்டுவிட்டன. பிரேமதாஸாவைத் தூற்றி வருபவர்கள் எவரும் இவ் விழாவுக்கு அழைக்கப்படும் பட்சத்தில் பிரேமதாஸாவின் குடும்பத்தினர் எவரும் அதில் கலந்து கொள்ளமாட்டார்கள்'' —

இவ்வாறு பிரேமதாஸாவின் குடும்பத்துக்கு நெருங்கிய சிலர் தெரிவித்துள்ளனர் என்றும் சண்டே ரைம்ஸ் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-எ)

ஈழத்து இலக்கியங்கள் சுயமானவை; அவை மண்ணின் இலக்கியங்களுமாகும்

இங்கே மாபெரும் இலக்கியம் உதிக்கும் என்கிறார் கோமல்

'சுபமங்களா' ஆசிரியர் திரு. கோமல் சுவாமிநாதனுக்கு நேற்று முன்தினம் (4ஆம்திகதி) பிற்பகல் 3மணியளவில் யாழ். பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் பொது வரவேற்பு நடைபெற்றது.

பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் நடைபெற்ற இவ்வரவேற்பில் தேசிய கலை இலக்கியப் பேரவை செயலாளர் திரு. க. தணிகாசலம், தமிழீழ விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தின் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை ஆகியோர் முறையே வரவேற்புரையும், தொடக்கவுரையும் நிகழ்த்தினார்கள்.

தேசிய கலை இலக்கியப் பேரவையும், யாழ். பல்கலைக்கழகத் தமிழ் மன்றமும் ஒழுங்கு செய்த இந்த வரவேற்புக் கூட்டத்தில் 'தமிழ் இலக்கியத்தில் நிகழ்வுகளும் எதிர்பார்ப்புகளும்' எனும் பொருளில் திரு. கோமல் சுவாமிநாதன் விரிவுரைநிகழ்த்தினார்.

அவருடைய உரையின் தொகுப்பு இது:

யாழ்ப்பாணத்துக்கான எனது பயணம் ஒரு புனித யாத்திரை போல அமைந்தது.

வழியில் எத்தனை கஷ்டங்கள் ஏற்பட்டாலும் தமிழீழ மண்ணிலே கால் வைத்ததும் மனதுக்கு ஒரே அமைதியாக இருந்தது.

கவிஞர் புதுவை இரத்தினதுரை என்னிடம் ஒரு வினாவை எழுப்பினார்.

ஈழத்தமிழ் மக்களாகிய நாங்கள் உங்களுக்கு என்ன துரோகம் செய்தோம்? என்பதே அக்கேள்வி.

இலங்கைத் தமிழர் விஷயத்திலே இந்திய அரசாங்கம் செய்தது சரிதானா?

இந்திய ஆளும் வர்க்கம் ஏதோ ஒரு நாள் இக்கேள்விக்குப் பதிலளித்தே ஆக வேண்டும்.

நான் கொழும்பிலிருந்து புறப்பட்டபோது 'அரசியல் பேசக்கூடாது' என்ற நிபந்தனையுடனேயே எனக்கு அனுமதி தந்தார்கள்.

''இலக்கிய விரிவுரைகள் ஆற்றுவேன்'' என்று கூறியே நான் இங்கு வந்தேன்'

இலக்கியமும் அரசியலே

எனது இலக்கியமும் ஓர் அரசியல் தான் என்பது அவர்களுக்குத் தெரியாது

ஈழத்திலே ஒரு மகத்தான இலக்கிய வளர்ச்சி ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது.

எங்கே போராட்டம் இருக்கிறதோ அங்கே தான் கலை, இலக்கியம் விறுவிறுப்பாக வளரும். இது உலக நாடுகள் அனைத்துக்கும் பொருந்தும்.

மக்கள் விடுதலைக்காக முனைந்து போராடும் போது புதிய இலக்கியம், புதிய சிந்தனை உருவாகின்றது.

அரசு வன்முறை மிதமிஞ்சிப் போகும்போது மக்கள் வன்முறையில் ஈடுபடுகின்றார்கள். லத்தின் அமெரிக்க நாடுகளில் இது நடைபெறுகின்றது.

இந்திய சுதந்திரப் போராட்டத்தை அகிம்சைப் போராட்டம் என்று, கத்தியின்றி ரத்தமின்றி நடைபெற்ற யுத்தம் என்று கூறுவார்கள்.

ஆனால் இதுவும் ஒருவகையில் வன்முறைப் போராட்டமாகத் தான் நடைபெற்றது. இந்திய சுதந்திரப் போராட்டத்தில் எண்ணற்றோர் உயிரிழந்தார்கள்.

இலக்கியத்துக்கு குறிக்கோள் வேண்டும்

இலக்கியத்துக்குக் குறிக்கோள் வேண்டும். குறிக்கோள் இல்லாத சமுதாயத்திலிருந்து குறிக்கோள் உள்ள இலக்கியம் தோன்ற முடியாது?

தமிழ் இலக்கியத்தில் பாரதி புதிய ஜீவனை, புதிய விடுதலை மூச்சை [illegible] முகம் செய்தார், மக்களைப் பற்றிப் பாடு [illegible] அவர் விளங்கினார்.

1947ஆம் ஆண்டு வரை பாரதி எழுப்பிய விடுதலைக் காற்று வீசியது பின்னர் ஒரு பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

சுதந்திரத்துக்குப் பின்னால் சுயநலமிகளின் ஆட்சி ஏற்பட்டது பொருள் சம்பாதிப்பதே மனிதரின் முக்கிய இலட்சியமாகியுள்ளது.

மோசடிக்காரரும், காடையரும், குண்டர்களும், போலித்தனமானவர்களும் மனிதரின் வழிகாட்டிகளாக அமையும். அவல நிலைமை தோன்றியுள்ளது.

தமிழக இலக்கிய நிலைமை

தமிழகம் இன்று இதைத்தான் சந்தித்துள்ளது. மக்கள் சார்ந்த, நாடு சார்ந்த கலை இலக்கியம் இல்லாது போய்விட்டது.

இலட்சியம் இல்லாமையும் இலக்கியம் ஒரு வர்த்தகப் பொருளாகியதுமே தமிழ் இலக்கியத்தின் தற்போதைய பின்னடைவுக்குக் காரணம் ஆகும்.

முதலாளி வர்க்கம் தான் இன்றைய தமிழ் இலக்கியத்தை ஆட்டிப்படைக்கிறது, அதனால் பயன்பெறுகிறது.

பொருளாதார ஏகாதிபத்தியத்துக்கு அனுசரணையாக இன்று உலகளாவிய ரீதியில் கலாசார ஏகாதிபத்தியம் நடைபெறுகிறது. ஒரு பாவனையாளர் கலாசாரம் உருவாகியுள்ளது; உருவாக்கப்பட்டுள்ளது.

இவற்கு ஏற்றவாறே கலை இலக்கியங்களும் படைக்கப்படுகின்றன.

தமிழ் சினிமாக்கள் வியாபாரத்தை மையமாகக் கொண்டு நடத்தப்படுகின்றன. வானொலி, தொலைக்காட்சி முதலியனவும் அப்படியே.

மனித நேயத்தைத் தேடும் இலக்கியங்கள் முற்போக்கு இலக்கியங்கள் ஆகும்.

[illegible] சியல் கோட்பாடு துணையாக மக்களின் போராட்டம் எழ வேண்டும். இதற்கு அனுசரணையாக கலை இலக்கியம் தோன்ற வேண்டும்.

இப்பொழுது ஈழத்தில் நடைபெறும் போராட்டத்தின் மூலம் மாபெரும் இலக்கியம் உதிக்கும் என்று நான் நம்புகின்றேன்.

ஈழத்து இலக்கியம் மண்ணின் இலக்கியம்

ஈழத்து இலக்கியங்கள் மண்ணின் இலக்கியங்கள்; பிறரைக் ''காப்பி''யடியாத சுயமான இலக்கியங்கள்.

ஈழத்து இலக்கிய வளர்ச்சியின் முழுப் பரிமாணத்தையும் தமிழகம் அறிந்து கொள்ளவில்லை.

ஈழம் பல்கலைக்கழகங்கள் நவீன இலக்கியங்கள் பற்றி நன்கு அறிந்து கொண்டிருக்கின்றன.

எமது பல்கலைக்கழகங்களோ? இன்னும் புறநானூறு சிலப்பதிகாரத்தோடு நிற்கின்றன.

தமிழகத்தில் கலை மேட்டுக்குடித் தன்மையதாக இருக்கிறது. இன்னொரு பக்கத்தில் குப்பையான கலை இலக்கியம் மலிந்துள்ளது அங்கே அறிவுஜீவி அராஜகவாதம் தலைவிரித்தாடுகிறது.

தமிழகத்தில் தமிழ்மொழியின் வளர்ச்சி பற்றி பல வகைக் கோணத்திலான பார்வை ஏற்படவில்லை. இலக்கியத்தால் மட்டும் தமிழ் வாழ்ந்துவிடாது. இது தொடருமாயின் வடமொழிக்கு ஏற்பட்ட முடிவே தமிழுக்கும் ஏற்படும்.

விஞ்ஞானத்தின் புதுத் துறைகளில் தமிழ் மொழியில வளர்ச்சி ஏற்படவேண்டும்; கலை இலக்கிய விமர்சனங்களும் விமர்சனக் கோட்பாடுகளும் தமிழ் மொழியில் கூடுதலாக அறிமுகமாக வேண்டும்; தமிழ்மொழி ஒரு காப்பகப்படுத்தப்பட்ட மொழியாக அமையவேண்டும். (அ-உ)

சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் மலிவு விற்பனை

யாழ்ப்பாணம், ஏப். 6

சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில்நாளை 7ஆம் 8ஆம் 9ஆம் திகதிகளில் மலிவு விற்பனை இடம்பெறுகிறது.

நாளையும், நாளை மறுதினமும் பிற்பகல் ஒரு மணி முதல் 5-00மணிவரையும்— 9ஆம் திகதி காலை 9மணி முதல் பி.ப.4-00மணிவரையும் மலிவு விற்பனை இடம்பெறும்.

பெண்கள், சிறுவர்களுக்கான தைக்கப்பட்ட ஆடைகள் மற்றும் சேலைகள் அழகுசாதனம் பொருள்கள் இவற்றுள் அடங்கும். [இ]

ஆலயங்களில்

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தில் 10 ஆம் திருவிழாவான நாளை விநாயகப்பெருமான் விசேட மின்சார தீபங்களால் அலங்கரிக்கப்பட்ட மஞ்சத்தில் மாலை 6 மணிக்கு வீதி உலா வருவார் (க)

* * *

நல்லூர் ஸ்ரீ சட்டநாதர் ஆலயத்தில் துர்க்கை அம்பாளின் கும்பாபிஷேக தினத்தை முன்னிட்டு நாளை வியாழக்கிழமை காலை 10. 00 மணியளவில் விசேட சங்காபிஷேகமும், மாலையில் தெருவீதி உலா உற்சவமும் இடம்பெறும் (க)

* * *

பருத்தித்துறை கொட்டடி சித்திவிநாயகர் ஆலய வருடாந்த தெப்போற்சவ திருவிழா நாளை மாலை 7.00 மணிக்கு நடைபெறும். (உ-87)

அன்னை பூபதி நினைவு சிரமதானம்

அன்னை பூபதி நினைவாக இன்று 6ஆம்திகதி இயற்றாலை நாவற்காடு அ. த. க. பாடசாலை துப்பரவு செய்யப்படும். (க)

செய்திக் கொத்து

நாதஸ்வர இசையில் அணிவகுப்பு

தென்மராட்சி, ஏப். 6

தென்மராட்சி பகுதியில் முதன்முறையாக நாதஸ்வர தவில் இசையில் பாடசாலை மாணவர்களின் அணி வகுப்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

சாவகச்சேரி மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலய விளையாட்டுப் போட்டியிலேயே இப்புதிய இசையில் அணிநடை நடைபெற்றது (ச117)

வட்டுக்கோட்டை வீதி திருத்தம்

வட்டுக்கோட்டை, ஏப். 6

கடந்த 4 ஆண்டுகளாகத் திருத்தப்படாதிருக்கும் வட்டுக்கோட்டைப் பிரதான வீதியின் திருத்தத்துக்கென 1994ஆம் ஆண்டு பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவு நிதியிலிருந்து பணம் ஒதுக்கப்பட்டுள்ளது.

வட்டுக்கோட்டை சமூக சேவகர் சமாதான நீதிவான் நா. நடராசா, வலிகாமம் மேற்கு பிரதேசச் செயலரும்சங்கானை மேலதிக அரச அதிபருமான திரு கா. சந்திரராசாவுடன் தொடர்பு கொண்டு இவ்விடயம் பற்றி விரைவில் நடவடிக்கை எடுக்கக் கேட்டுள்ளார். (ஊ)

பாய் முதலியன அன்பளிப்பு

தென்மராட்சி, ஏப் 6

தென்மராட்சி பகுதியில் தங்கியுள்ள இடம் பெயர்ந்த மற்றும் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள 250 குடும்பங்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழக சாவகச்சேரிப் பிரிவினர் பாய், படுக்கை விரிப்புகளை அன்பளிப்பாக வழங்கி வருகின்றனர். (ச-117)

பாடசாலைகளில்

மல்லாகம் விசாலாட்சி வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று புதன்கிழமை பிற்பகல் 2 00 மணிக்கு வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெறுகின்றன.

தெல்லிப்பழை, சண்டிலிப்பாய் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. க. துரைசிங்கம் வைபவத்தில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்கிறார். (இ)

* * *

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரியின் உயர்தர வகுப்பு மாணவர் மன்றத்தின் வருடாந்த ஒன்றுகூடல் இன்று கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். (உ-11)

கலையில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எடுத்து வரவில்லை என்று அறிந்த அரச அதிபர், பரீட்சை ஆணையாளருடன் பேச்சு நடத்தினார். முடிவுகளை கொழும்பிலிருந்து பருத்தித்துறைக்கு அனுப்பி வைக்கும் பணியை தாமே பொறுப்பேற்றார்.

அதன் பிரகாரம் யாழ். செயலகத்தில் பணிபுரியும் மாவட்டக் காணி ஆணையாளர் திரு எஸ். கைலைநாதன் மூலம் ''ஹெந்தல'' கப்பலில் பரீட்சை முடிவுகளை அனுப்பி வைத்தார்.

பரீட்சை முடிவுகள் அடங்கிய பொதிகள் நேற்றுகாலை 8 30 மணிக்கே பருத்தித்துறைக்கு வந்துவிட்டன. கல்வித் திணைக்கள அதிகாரிகள் எவரும் அங்கு செல்லாதது கண்டு —

திரு. கைலைநாதன் போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவு மற்றும் திட்டப் பணிப்பாளரின் உதவியுடன் முடிவுகளை உணவுத் திணைக்கள வாகனம் ஒன்றில் கோண்டாவிலுக்கு எடுத்து வந்தார்.

பி. ப 4 30 மணிக்கு முடிவுகள் கல்வித் திணைக்களத்துக்கு கொண்டு வந்து சேர்க்கப்பட்டன.

இத்தனைக்கும் —

பரீட்சை முடிவுகள் 'ஹெந்தல' மூலம் அனுப்பப்படும் தகவலும் —

அவை பருத்தித்துறைக்குச் சென்று பெறுப்பேற்கும் படியான கோரிக்கையும் —

யாழ். செயலகத்தினால் யாழ். கல்வித் திணைக்களத்துக்கு நேற்று முன்தினம் காலையே தெரிவிக்கப்பட்டு விட்டது.

அவ்வாறெனின் கல்விப் பகுதி இவ்வாறு அசமந்தமாகவும், அக்கறையில்லாமலும் நடந்து கொண்டது ஏன் என்று பரீட்சார்த்திகளும் அவர்களது பெற்றோர்களும் கேட்கின்றனர். (அ-173-3)

தமிழக...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

திருக்கிறது

இந்த அச்சுறுத்தல் அடங்கிய பத்திரிகை குறிப்பை தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் வெளியிட்டிருப்பது அரசியல் சட்டத்தின் அடிப்படை உரிமையாகக் கூறப்பட்டுள்ள பேச்சு உரிமை, கருத்து உரிமை, பத்திரிகை சுதந்திரம் ஆகியவற்றை பேணிக்காக்கும் நல்ல மரபிற்கு உகந்ததாக இல்லை என நீதிபதி ஆர். எஸ். சர்க்காரியா தலைமையில் டில்லியில் கூடிய பத்திரிகைக் கவுன்சில் கருத்து தெரிவித்தது.

சென்னையில் இருந்து வெளிவரும் ஒரு மாலை நாளிதழ் ஒன்று தாக்கல் செய்திருந்த முறையீடு குறித்து கருத்து வெளியிட்ட போதே பத்திரிகை கவுன்சில் இப்படி தெரிவித்துள்ளது. (த-3)

காட்டின் வளமே
நாட்டின் பலம்

தமிழீழ மாணவர்களே
உங்களுக்கான சிறப்பு ஏற்பாடு இதோ

மாணவர்களே அறிவியல் பூர்வமான பயிலும் பாட நெறி தொடர்பான சந்தேகங்கள் எதுவானாலும் தீர்த்து வைக்க நாம் ஏற்பாடு செய்துள்ளோம்.

செய்ய வேண்டியது இதுதான்

சந்தேகங்களை வினாக்களாக எழுதி அறிவியற்கழக தபால் பெட்டியில் சேருங்கள். அல்லது கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

பதில் உங்களை தேடி வரும்.

இதுதான் முகவரி
மாணவர் அறிவியற் கழகம்
விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு
இணுவில், தமிழீழம்.

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு
தமிழீழம்.

(7785)

எமது புதிய வெளியீடுகள்

- **ஜிகுபுகு ஜிகுபுகு ரயிலே**
  மம்முட்டி, மோகன்லால், தியாகராஜன்
- **முதலமைச்சர்**
  அருண்ராஜ், தேவராஜ்
- **பெண்டாட்டி மனசுலவச்சா**
  கங்கா, கவுண்டமணி, செந்தில்
- **OPERATION DESERT STORM**
  (குவைத் – ஈராக் யுத்தம்)

அனைத்தும் Original பிரதிகள். மேலும் புதிய 6 திரைப்படங்கள் தணிக்கையின் பின் வெளியாகும்.

வீடியோ, ஓடியோ, போட்டோஸ்ராட்
தேவைகளுக்கு

மாருதி வீடியோ விஷன்

பரமேஸ்வரா சந்தி, திருநெல்வேலி.

(சி/7684)

கண்ணீர் அஞ்சலி

திருமதி அன்ரனியா அந்தோனிப்பிள்ளை

எமது கல்லூரி ஆசிரியை
செல்வி நி, அந்தோனிப்பிள்ளை

அவர் தம் தாயார் மரணத்துயரத்தில் நாமும் பங்கேற்று கண்ணீர் அஞ்சலி செலுத்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
துணை ஆளணியினர்,
பா அ. ச., ப. மா. ச.

யாழ் மத்திய கல்லூரி,
யாழ்ப்பாணம்.

(30260)

மரண அறிவித்தல்கள்

திருமதி
அன்ரனியா அந்தோனிப்பிள்ளை

திருமதி அன்ரனியா அந்தோனிப்பிள்ளை காலமாகி விட்டார். இவர் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளையின் அன்பு மனைவியும், எட்மன் கைமர், எர்னா நிர்மலா, சிந்தியா, றெஜிசெபஸ்ரியன் ஆகியோரின் அருமைத் தாயாரும், காலஞ்சென்ற செல்வநாயகம், பிரபாகரன் யோன் பிள்ளை ஆகியோரின் அன்பு மாமியாரும், கிருசாந்தி, அனுசாந்தி ஆகியோரின் அருமைப் பேர்த்தியும், J. P. A பிலிப்ஸ், காலஞ்சென்ற வைத்திய கலாநிதி J P C பிலிப்ஸ் ஆகியோரின் அருமைச் சகோதரியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்துக்காக இன்று (06-04 94) புதன்கிழமை பிற்பகல் 3-30 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து புனித மரியன்னை சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
திருமதி செல்வநாயகம்

இல 114 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(7183)

சின்னத்தம்பி நாகராசா

மண்டைதீவை பிறப்பிடமாகவும் கல்வியங்காட்டை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி நாகராசா 5 4-1994 இல் காலமானார்.

இவர் விஜயலக்சுமியின் அன்புக் கணவரும் உதயசந்திரிக்கா (ஜேர்மனி), உதயசாந்தி, உதயசூரியன் (சுவிஸ்), உதயசந்திரன் (சவுதி) உஷந்தினி உமாபாலினி, தர்ஷினி, தயாளன், ஆகியோரின் அன்புத் தந்தையும் முருகதாஸ் ரவிச்சந்திரன் ஆகியோரின் மாமனாரும் தஷியந்தி, சுகிர்தன், அகர்சன், துவாரகா ஆகியோரின் பேரனும் நாகலட்சுமி, நாகரட்ணம், அன்னலட்சுமி, ஞானபூங்கோதை, அன்னராஜா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று புதன் (6-4-94) 3-30 மணியளவில் 17 நல்லூர் குறுக்கு வீதியிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள்

17, நல்லூர் குறுக்கு வீதி,
யாழ்ப்பாணம்.

(30257)

இன்று

பளை மகா வித்தியாலய பரிசளிப்பு விழா இன்று புதன் கிழமை மாலை 5.30 மணிக்கு நடைபெறும்.

பளை கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. ப. அரியரத்தினம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

★ ★ ★

அரியாலை சுதேசிய திருநாள் கொண்டாட்ட பவள விழாவை ஒட்டிய சமூக, இசை நிருத்திய நாடகப் போட்டியும் கலைப் போட்டிகளுக்கான பரிசில்கள் வழங்கல் நிகழ்வும் இன்று இரவு 7.00 மணி முதல் அரியாலை சனசமூக நிலைய அமரர் காசிப்பிள்ளை அரங்கில் யாழ் செயலகத் திட்டமிடல் பணிப்பாளரும், விழாத் தலைவருமாகிய திரு. செ. பத்மநாதன் தலைமையில் இடம்பெறும்.

எட்டு நாடகங்கள் இந்நிகழ்வில் இலவசமாகக் காண்பிக்கப்படும். (உ-30)

★ ★ ★

நல்லூர் பிரதேச சபை கொக்குவில் உப அலுவலக பொது நூலக வாசகர் வட்ட மாதாந்த சொற்பொழிவுத் தொடரில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு பொது நூலக கேட்போர் கூடத்தில் "இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இந்தியா — சீனா போட்டி" என்ற தலைப்பில் திரு. மு. திருநாவுக்கரசு உரை நிகழ்த்துவார். (இ)

★ ★ ★

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினர் நடத்திவரும் அறிவியல் கருத்தரங்குத் தொடரின் இரண்டாம் அங்கம் இன்று மாலை 4 மணிக்கு யாழ். பல்கலைக்கழக மண்டபத்தில் நடைபெறும். நுண்கலைத்துறைத் தலைவர் பேராசிரியர் கா. சிவத்தம்பி "அறிவியலின் வளர்ச்சியும் சமூக மாறுதல்களும்" என்ற தலைப்பில் கருத்துரை வழங்குவார். (உ)

★ ★ ★

பருத்தித்துறை ஸ்ரீ இராமகிஷ்ணசாரதா சேவாச்சிரமத்தினர் நடத்தும் ஸ்ரீ இராமகிஷ்ணர் விவேகானந்தர் பற்றிய ஒன்பதாவது புத்தகக் கண்காட்சி இன்று காலை 9 மணிக்கு சாவகச்சேரி மகளிர் மகா வித்தியாலய மண்டபத்தில் தென்மராட்சி கல்விக் கோட்டப் பிரதிப் பணிப்பாளர் திருமதி புஷ்பா கணேசலிங்கத்தால் ஆரம்பித்து வைக்கப்படும்.

ஐ.தே.க. ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளாம் தீர்க்கும் தமது விருப்பத்தை ஜனாதிபதி அனுரா விடம் அப்போது தெரிவித்தார் என்றும் கூறப்படுகின்றது.

விஜேதுங்காவின் நிலைப்பாட்டை அன்றைய தினம் இரவே தொண்டமானிடம் அனுரா தெரிவித்தார்.

இச்சந்திப்புகளைத் தொடர்ந்து உருவாகியுள்ள சூழ்நிலை இரு கட்சிகளுக்கும் இடையேயான மோதலை முடிவுக்குக் கொண்டு வந்துள்ளதாக 'சண்டே ஐலண்ட்' மற்றும் 'திவயின' பத்திரிகைகள் தெரிவித்துள்ளன.

இதனிடையே கடந்த 29 ஆம் திகதி ஜனாதிபதி விஜேதுங்கவும் தொண்டமானும் நேருக்கு நேர் சந்தித்துப் பேச்சு நடத்தியதாகவும் —

அப்பேச்சுவார்த்தை வெற்றியளிக்கவில்லை எனவும் "யுக்திய" வார இதழ் தெரிவித்துள்ளது. இதனால் ஐ.தே.கவுக்கு வழங்கும் ஆதரவை இ.தொ.கா விலக்கிக் கொள்ளும் என்ற அறிவிப்பு சில தினங்களில் வெளியாகலாம் எனவும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது. (உ-எ)

சுடரொளி
கல்வி நிலையம்

(Vibgyor அகடமி)
குளப்பிட்டி வீதி,
ஆனைக்கோட்டை.

SPOKEN ENGLISH
By
M. A. ஹரி
B A Dip in Ed

ஆரம்பம்: 07 04 94
பிற்பகல் 5 மணி
(செவ் -வியா.பி.ப 5 மணி)

O/L Day Class

ஆரம்பம்: 11 04 94
திங்கள் 8 மணி

பிரபல
ஆசிரியர் குழு

[30264]

நாளை நடப்பவை

உலக சுகாதார தினத்தை ஒட்டி நாளை வியாழக்கிழமை காலை 8-30 மணி முதல் யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் "சுகவாழ்விற்கு வாய்ச் சுகாதாரம்" என்ற நிகழ்ச்சி நடைபெறும்.

காலையில் இப்பொருள் பற்றிய சிறப்புரைகளும் கலந்துரையாடலும் படமூல விளக்கங்களும் இடம்பெறும். மாலை 2 முதல் 5–30 மணி வரை கலை நிகழ்ச்சிகள் இடம்பெறும். (க)

★ ★ ★

யாழ். இந்து மைதான சந்தி மெய்கண்டதேவர் ஆதீனத்தில் பிறவிக் குருடராகி நாயனார் பதவியடைந்த தண்டியடிகள், சேர். பொன். அருணாசலத்தின் ஞானகுருவான பரமகுரு சுவாமிகள் ஆகியோரின் குருபூசை வழிபாடு நாளை வியாழக்கிழமை காலை 9 மணி முதல் நிகழும். (க)

★ ★ ★

சுவாமி சாந்தானந்தாவின் 60 ஆம் ஜெயந்தி விழாவும், திருநெல்வேலி நுண்கலைக் கோவிலின் 6 ஆம் ஆண்டு நிறைவு விழாவும் நாளை பிற்பகல் 4 30 மணிமுதல் நடைபெறவுள்ளன.

திருநெல்வேலி கலாசாலை வீதியில் உள்ள கலாமண்டபத்தில் விழா நிகழ்ச்சிகள் இடம்பெறும். (உ-5)

★ ★ ★

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் முத்தமிழ் விழா நாளை காலை, மாலை நிகழ்ச்சிகளாக நடைபெறும்.

கலாசாலை இ.திலக்குமி மண்டபத்தில் நடைபெறும் இவ் விழாவில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறைத் தலைவர் பேராசிரியர் கா. சிவத்தம்பி கலந்து கொள்வார்.

கோப்பாய் ஆசிரிய கலாசாலை தமிழ் மன்றத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் இவ் விழாவில் விவாத அரங்கு, கருத்துரைக் கோவை, நடனம் கவியரங்கம், நாடகம் போன்ற நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன. (ஓ)

★ ★ ★

வலிகாமம் கல்விக் கோட்டப் பாடசாலை அதிபர்கள் கூட்டம் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு மருதனார்மடத்தில் உள்ள யூனியன் கல்லூரியில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. த. துரைசிங்கம் தலைமையில் நடைபெறும்.

கோட்ட மெய்வல்லுநர் போட்டி, தமிழ்த்தினப் போட்டி, சுகாதார வாரம் ஆகியன தொடர்பான ஒழுங்குகள் குறித்து இக் கூட்டத்தில் ஆராயப்படும் என அறிவிக்கப்பட்டது. (ஒ)

★ ★ ★

சங்கானைக் கல்விக் கோட்டப் பிரிவுக்குட்பட்ட 9 ஆம், 10 ஆம், 11 ஆம் ஆண்டு மாணவர்களுக்கான கணித, விஞ்ஞான அறிவுப் போட்டி நாளை காலை 8 மணியளவில் சித்தன்கேணி ஸ்ரீ கணேச வித்தியாலயத்தில் சங்கானைக் கல்விக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. ப. விக்கினேஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

எம்.எல்.ஏ. கைது

சென்னையில் உள்ள தமிழக சட்ட சபை இந்திராகாங்கிரஸ் அலுவலகத்தினுள் புகுந்து அங்கு இருந்த முகாமையாளரைத் தாக்கிக் காயப்படுத்திய சம்பவம் தொடர்பாக தமிழக சுயேச்சை எம். எல். ஏயான தாமரைக்கனி பொலீஸாரால் கைது செய்யப்பட்டார்.

காயமடைந்த முகாமையாளர் ராஜகோபாலன் ராயப்பேட்டை மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டார்.

தாக்குதல் நடத்தியபோது தாமரைக்கனி மதுபோதையில் இருந்தார் என்று கூறப்படுகிறது.

லெப். கேணல்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வில், இராணுவத்தில் தம்மை மீண்டும் சேர்த்துக் கொள்ளவும், தம்மை இராணுவத்தில் இருந்து நீக்கியதால் தமக்கு ஏற்பட்ட மன உளைச்சலுக்கு நட்டஈடு வழங்கும்படி இராணுவத் தளபதிக்கு உத்தரவிடுமாறும் உயர் நீதிமன்றத்தைக் கேட்டுள்ளார்.

இம்மனு அடுத்த மாதம் ஒன்பதாம் திகதி விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளது.

கலை வர்த்தகக் கல்லூரி
C. C. A.

(வெலிங்டன் சந்திக்கு அருகில்)
யாழ்ப்பாணம்.

சனி, ஞாயிறு வகுப்புகள்

G.C.E.(A/L)96
கலை வர்த்தகப் பிரிவுகள்

ஆரம்பம்: **09 - 04 - 94**
சனிக்கிழமை காலை 8 மணி

எமது ஆசிரியர் குழு

பொருளியல்	திரு. உசயன்
கணக்கியல்	திரு. ஸ்ரீ
வர்த்தகமும் நிதியும்	திரு. இ இரட்ணம்
அளவையியல்	திரு. சயந்தன்
இந்து நாகரிகம்	திரு. ஜோதீஸ்வரன்
புவியியல்	திரு. வேலாயுதபிள்ளை
தமிழ்	திரு. தங்கராஜா
அரசியல்	திரு. பஞ்சு

குறிப்பு:

1. மாணவர் எண்ணிக்கை எமது நிறுவனத்தில் வரையறுக்கப்பட்டுள்ளது. ஆகவே முற்கூட்டி பதிவு செய்து கொள்ளுங்கள்.
2. மாதாந்தம் பரீட்சைகள் நடத்தப்பட்டு மாணவர்கள் வழிநடத்தப்படுவார்கள்.
3. நேர அட்டவணையை காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

நிர்வாகி

(சி-7686)

மரண அறிவித்தல்

தில்லைநாதன் ஐயர் குலேந்திரன்

(குலன்)
(யாழ் மத்திய கல்லூரி மாணவன்)

குலேந்திரன் அவர்கள் (4 - 4 - 94) அன்று அகால மரணமாகி விட்டார்.

இவர் தில்லைநாதன் ஐயர் (மணவறை, சப்பறம் பந்தல் சாத்துப்படி அமைப்பாளர்) — சரஸ்வதிதேவி அவர்களின் அன்பு மகனும் ரஜீந்திரன், அமரேசன், வியலேந்திரன், சுரேந்திரன், சேகவன், இந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று [6-4-94] புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் 9 மணியளவில் செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
ச, தில்லைநாதன்
[ஐயர்]

38, அரசடிப் பிள்ளையார் வீதி,
நாவலர் ரோட்டு,
யாழ்ப்பாணம்.

(30265)

ஆதன மதிப்பீட்டாளர்
புள்ளி விவரவியலாளர்களுக்கான
வேலை வாய்ப்பு

யாழ். மாவட்டத்தில் ஆதன மதிப்பீடு செய்வதற்கும் ஆதன புள்ளி விவரங்கள் சேகரிப்பதற்கும் இது தொடர்பான பட்டறிவுடையோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்ப முடிவு நாள் **10-04-94** விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி - இல - 320 மே/பா ஈழநாதம், மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். குறிப்பு, கடித மேலுறையின் இடது பக்க மூலையில் விண்ணப்ப இலக்கத்தை குறிப்பிடவும்.

யோ, தமிழ்க்குமரன்
வருவாய்ப்பொறுப்பாளர்.
யாழ். மாவட்டம்
நிதித்துறை
தமிழீழ விடுதலைப் புலிகள்
04 - 04 - 94

(சி/7680)

ஈவ்லின் இரத்தினம்
பல்லினப் பண்பாட்டு ஆய்வு நிறுவனம்
கருத்தரங்கு

பெண்கல்வியும் வறுமையும்
— வளர்முக நாடுகளின் அனுபவம்

உரைவழங்குபவர்.

மா. சின்னத்தம்பி எம், ஏ.
(விரிவுரையாளர் கல்வியியற்துறை யாழ். பல்கலைக்கழகம்)

இக்கருத்தரங்க 07-04-94 வியாழக்கிழமை
பிற்பகல் 4.00 மணிக்கு நிறுவனத்தின்
நூலக மண்டபத்தில்

திருமதி மனோன்மணி சண்முகதாஸ்
(சிறப்பாய்வாளர், கச்சுயின் பல்கலைக்கழகம், யப்பான்)
அவர்களின் தலைமையில் நடைபெறும்.

எஸ், சிவலிங்கராஜா
இயக்குநர்.

(சி/7683)

உடுப்பிட்டி ப. நோ. கூ. . சங்கம்

(வ/து), உடுப்பிட்டி

இலிகிதர் பயிற்சியாளர்

எமது சங்கத்தால் இலிகிதர் பயிற்சியாளர்களைத் தெரிவு செய்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தெரிவு செய்யப்படுவோர் ஒருவருட காலத்திற்கு நிர்வாக/ கணக்கியல்/ வர்த்தக நடவடிக்கைகளில் பயிற்சி அளிக்கப்படுவர். பயிற்சியில் சிறந்த பெறுபேறுகள் காட்டுவோருக்கு சங்கத்தில் வெற்றிடங்கள் வரும் போது முன்னுரிமை வழங்கப்படும்.

1. வயதெல்லை:-
   01-03-94 ஆம் திகதியில் 18 இற்கும் 23 இற்கும் இடையில் இருத்தல் வேண்டும்.
2. அடிப்படைத் தகைமைகள்:-
   க.பொ.த. சாதாரண தரத்தில் தமிழ், கணிதம் ஆகிய பாடங்கள் உட்பட ஐந்து திறமைச் சித்திகளுடன் பெற்றுள்ள சித்தி.
   அத்துடன்,
   க.பொ.த. உயர்தரத்தில் ஒரே தடவையில் மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
3. பயிற்சிப் படி:-
   பயிற்சிக் காலத்தில் பயிற்சியாளருக்கு நாளொன்றிற்கு 75/- படியாக வழங்கப்படும்.

குறிப்பு:-

01. க.பொ.த. சாதாரண தரத்தில் ஆங்கிலத்தில் சித்தியும் க.பொ.த. உயர்தரத்தில் கணக்கியலில் சித்தியும் விசேட தகைமைகளாக கணிக்கப்படும்.
02. சங்க தொழிற் பரப்பிற்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
03. அடிப்படைத் தகுதிகளைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரர்கள் அறிக்கை எழுதுதல், சுயமாகவே கடிதம் தயாரித்தல், கணக்கீடு என்பவற்றில தேர்வுக்கு தோற்ற வேண்டும்.

விண்ணப்பங்களை சுயமாகத் தயாரித்து 16-4 94 ஆம் திகதிக்கு முன்னரோ அல்லது அன்றோ இடைக்கிடக் கூடியதாக பொது முகாமையாளர், உடுப்பிட்டி ப நோ.கூ. சங்கம், உடுப்பிட்டி என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

17-03-94 ஆம் திகதிய எமது இலைகள் மூலமான அறிவிப்பின் பிரகாரம் விண்ணப்பித்தவர்கள் மீண்டும் விண்ணப்பிக்கத் தேவையில்லை.

பொது முகாமையாளர்,
உடுப்பிட்டி ப.நோ.கூ. சங்கம்,
உடுப்பிட்டி.

(சி-7632)

---

31 ம் நாள் நினைவஞ்சலி
நல்லதம்பி சிவதாசன்

நல்லதம்பி சிவதாசன் (முன்னாள் நீதிமன்ற பிரதம சுருக்கெழுத்தாளர்) 07-03 94 அன்று கொழும்பில் காலமானார். அன்னாரின் அந்தியேட்டிக் கிரியை இன்று (06 04 94) புதன்கிழமை கொழும்பில் நடைபெறும். உற்றார், உற்றவினர்களுக்கு இதனை அறியத் தருவதுடன், அன்னாரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கிறோம்.

இ. ஈஸ்வரகுமாரன்

48, கொழும்புத்துறை வீதி,
கொழும்புத்துறை.

(30258)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 202/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 06-04-1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.